இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா:-10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-12 | 28-09-2005 | புதன்கிழமை | ஓசை-223



கணேசா நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464.
இல:134, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12760)

## காலம் கனிந்துள்ள இவ்வேளையில் கடல் போல் பொங்கி எழுவோம்

### -மன்னார் தேசிய எழுச்சிப்பிரகடனக்குழு அறைகூவல்

தமிழ் எங்கள் உயிர்! தமிழீழ தாயகமே எங்கள் தாகம்!! காலம் கனிந்துள்ள இவ்வேளையில் கடல் போல் பொங்கி எழுவோம் வாருங்கள்;வந்து கூடுங்கள். அணிதிரண்டு கூடுங்கள். ஒன்று பட்ட தமிழ்தேசியத்தை வென்று எடுப்போம்! ஆண்ட தமிழினம் மீண்டும் ஆள ஆணை வழங்குங்கள்.

இவ்வாறு இன்று பிற்பகல் 4.30 மணிக்கு மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள தேசிய எழுச்சிப்பிரகடன மாநாடு குறித்து மன்னார் மாவட்ட தேசிய எழுச்சிப்பிரகடனக்குழு விடுத்துள்ள அறை கூவலில் கேட்டுள்ளது.

அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பூரண இறைமையுடன் தம்மைத்தாமே ஆண்ட தமிழினம் கடந்த 400 ஆண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்திலும், பின்னர் சிங்களதேச ஆட்சியிலும் சிதைந்து சின்னா (12ஆம் பக்கம்பார்க்க)

## கள்ளியந்தீவில் அதிரடிப்படை சுற்றிவளைத்துத் தேடுதல்

(மட்டக்களப்பு)

அம்பாறை திருக்கோவில் கள்ளியந்தீவு கிராமம் நேற்று பிற்பகல் நான்கு மணியளவில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது படையினர் வீடு வீடாகச் சென்று சோதனையிட்டுள்ளனர். அனைவரினதும் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டதுடன் பெயர்களையும் படையினர் பதிவு செய்துள்ளனர். எனினும், யாரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல்கள் கிடைக்கவில்லை.

### ரணிலின் சனாதிபதித்தேர்தல் விஞ்ஞாபனம்

# இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பாக திட்டவட்டமான யோசனை எதுவுமில்லை!

## நாட்டை பிரிவினைக்கு இட்டுச்செல்லாத தீர்வாம்

(கொழும்பு)

***ஐக்கிய தேசியக்கட்சியின் சனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக திட்ட வட்டமான யோசனைகள் எதுவும் முன்வைக்கப்படாத அதேவேளை, நாட்டைப்பிரிவினைக்கு இட்டுச்செல்லாத தீர்வு முன்வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.***

ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று கட்சிதலைமையிலான ஸ்ரீகோத்தா விலில் வைத்து வெளியிடப்பட்டது.இதன்போது உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க,நாட்டைப் பிரிவினைக்கு இட்டுச் செல்லாத தீர்வு ஒன்றுக்கு தாம் தயாராகி வருவதாக குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையில் ஒருமித்த இணக்கப்பாடுகள் இருக்கின்றன.இதன்மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்காணும்சூழல்ஏற்பட்டுள்ளது. (12ஆம் பக்கம்பார்க்க)

### உருவப்படம் இணைப்பு




கடந்த 24 ஆம் திகதி சுக வீனம் காரண மாகச் சாவடைந்த லெப். கேணல் சுட்டா/ பிறையாளனின் உருவப் படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## சிறிலங்கா பொலிசாரின் விளக்கமறியல் நீடிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்தார்கள் என தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றின் உத்தரவின்பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த சப்இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று சிறிலங்கா பொலிசாருக்கும் கிளிநொச்சிமாவட்ட தமிழீழ நீதிமன்றினால் மீண்டும் எதிர்வரும் 11.10.2005 வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றுப்பகல் கிளிநொச்சிக் (12ஆம் பக்கம்பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதி மீளளிப்பு "இன்டநெசனல் அலர்ட்" பாராட்டு

தமிழீழ விடுதலைப்புலிகளால் மண் மீட்புக்காக கடந்த காலங்களில் மக்களிடம் இருந்து கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி, தற்போது மீளளிக்கப்பட்டு வருகின்றது. இதனை இன்டநெசனல் அலர்ட் பிரதிநிதி பார்வையிட்டு பாராட்டு தெரிவித்துள்ளார். மண் மீட்பு நிதி மீளளிப்பு தொடர்பாக கருத்துத்தெரிவித்த அவர் உலகில் எந்தவொரு அமைப்பும் போராட்ட காலத்தில் மக்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட நிதியை மீளளித்ததாக கேள்விப்பட்டதில்லை எனவும் இவ்வாறு இருக்க விடுதலைப்புலிகள் மக்களிடம் நிதியை மீளளிப்பு செய்வதையிட்டு தான் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

## இராணுவ முகாம் சென்று திரும்பிய பெண் இனந்தெரியாதோர் தாக்குதலில் பலி!

இராணுவ முகாமுக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த பெண் ஒருவர் இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை ஆறு மணியளவில் யாழ். குடாநாட்டில் இடம்பெற்றது.

நான்கு பிள்ளைகளின் தாயான ஓட்டுமடம் பொம்மைவெளிப்பகுதியைச் சேர்ந்த ஜெயராசா லீலாவதி (வயது-36) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராகும்.

குறிப்பிட்ட நபர் காலையில் அரு (12ஆம் பக்கம் பார்க்க)



## பொங்குதமிழ் பிரச்சாரத்திற்கு சென்றோர் படையினரால் ஆயுதமுனையில் தடுப்பு!

### ஆவேசமடைந்த மாணவர்கள் போராட்டம்

மண்டைதீவிற்கு பொங்குதமிழ் பிரச்சாரத்திற்கு நேற்றுக் காலை சென்ற குழுவினர் மண்டைதீவுச் சந்தியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா கடற்படையினரால் துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தப்பட்டனர். காலையில் சென்ற உயர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களே இவ்வாறு துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி இவர்களை உள்ளே செல்ல அனுமதிக்க முடியாதென கடற்படையினர் விரட்டியதைத் தொடர்ந்து குறிப்பிட்ட இடத்தைவிட்டு தாம் நகரப் போவதில்லையெனக் கூறி இவ் இளைஞர்கள் தமது வாகனங்களை உரிய இடத்தில் நிறுத்தி விட்டு அந்த இடத்திலேயே இருந்து தமது உரிமைக்காக வாதாடினார்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இன்று தமிழ் தேசிய எழுச்சி நாள்

**மன்னார் பொதுவிளையாட்டுமைதானம் மாலை 4.30**

## வரிவிளம்பரம்

**பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவம்**

2005,2006ஆம்கல்வி ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிப் படிவங்களை குயிலன் புத்தகசாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ளலாம்.
(சி/12926)

## தவறிவிட்டது

முத்துஐயன்கட்டு தட்டயன்மலை இல.79 இல் வசிக்கும் கந்தையா சிவனத்தன் என்பவருடைய தே. அ.அட்டை 490643435x நிரந்தரபாஸ் முக்கிய ஆவணம் அடங்கியமணிப்பேஸ் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநாதத்தில்அல்லது ஒட்டுசுட்டான் பிரதேசசெயலகத்தில் ஒப்படைக்கவும். தகவல் க.சிவனத்தன். (சி-12871)

## தவறவிடப்பட்டது

14 ஆம்ஒழுங்கைமுல்லைவீதி பரந்தனில் வசிக்கும் சி.தயாகரன் என்பவரது குறித்த தொகை நகைகள்25.09.2005 அன்றுதவறவிடப்பட்டுள்ளது.இதனைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி காவல் துறையினரிடமோ அல்லது, 0776538428 என்றதொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும் எடுத்துஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6741)

## சிறுநீரகம் தேவை

**31வயதுடையவருக்கு A+குருதி இனத்தினை உடையவரின் சிறுநீரகம் மிக அவசரமாக தேவைப்படுகின்றது. வழங்க முன்வருபவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் உடன்தொடர்புகொள்ளவும். 0777632754, 0717632754.** (சி.12882)

## உங்களை மறக்க எங்களால் முடியுமா



| கப்டன் உஷா | 2ஆம் லெப் வானிலா |
|---|---|
| மாலினி முத்துச்சாமி | திலகா முத்துச்சாமி |
| பிறப்பு :-1977-11-10 | பிறப்பு :- 1982-12-15 |
| வீரச்சாவு :-1998-09-28 | வீரச்சாவு :- 1999-10-14 |

ஓயாத அலைகள் – 02 அம்பகாமத்தில்

ஒரு கொடியில் பூத்த
இரு மலர்களே!
தானைத் தலைவன் வழியில்
தளராத உறுதியுடன்
களம் பல கண்டு
காவியமானவர்களே!
உங்கள் கனவு நிறைவேறும்
காலம் வெகு தூரமில்லை.

திரு.திருமதி முத்துச்சாமி,
திரு.திருமதி லிங்கம்,
குடும்பத்தினர்.

நாதன் குடியிருப்பு,
புன்னை நீராவி,
விசுவமடு.

பன்குளம்,
திருகோணமலை. (6733)

## 10 நிமிடத்தில் படங்கள்!!!

அவசரதேவைக்கான,பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப் படங்களையும் உடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம், டியூறோபிறேம், சகல லமினேசன் வேலைகளுக்கும் !!! (காலை 7.30மணி தொடக்கம் எமது சேவையினைப் பெற்றுக்கொள்ளுங்கள்)யாழ்.ஒளி (K.S.R. PHOTOS)இல.05கனகபுரமதெரு, கிளிநொச்சி, பஸ் நிலையம் சந்தைக்கருகாமை.) (6742)

## தவறிவிட்டது

புளியங்குளத்திற்கும் முகமாலைக்கும் இடையில் CTB பேருந்தில் (NOKIA) கமரா கான்போன் 24.09.2005 இல் 12.00 மணிக்கும் 4.30 மணிக்கும் இடையில் தவறிவிட்டது. கான்போன் சிம் 077654245 ஆகும். கண்டெடுத்தவர்கள் ஜெகன்வீடியோ ஓடியோசென்ரர் சட்டநாதர்வீதி திருநெல்வேலி யாழ். என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். T.P. 021-2228267 077-7041519 (6738)

## பகிரங்க ஏல விற்பனை

### வாய்ப்பைத் தவறவிட்டு வருந்தாதீர்கள்

**இடம்:** மல்லாவி/மல்லாவிச் சந்தை முன்பாக உள்ள கட்டடத்தில்

**காலம்:** 2005.09.29 அன்று
காலை: 10.00 மணிக்கு

**பொருள் விரிப்பு:** இலத்திரனியல் பொருள்கள், புடைவைகள், அழகு சாதனங்கள், ஊர்தி உதிரிப்பாகங்கள், இன்னும் பல்வேறுவகைப் பொருள்கள்.


**குறிப்பு:** 2005.09.27 ஆம் நாள் தொடக்கம் 2005.09.28 ஆம் நாள் வரை பொருள்களை இயலவிற்பனை நிலையத்தில் பார்வையிடலாம்.

**கவனிப்புக்கு:** நுழைவுக் கட்டணமாக ரூபா 50 இனைச் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.

வாருங்கள்..............கூறுங்கள் மருதம் வாணிபம்



# வியட்னாமை சூறாவளி தாக்கியது
# கரையோரப் பகுதிகள் பலத்த சேதம்





வியட்நாமின் தெற்கு கனோய்ப் பிரதேசத்திற்கு 150 கி.மீ அப்பாலுள்ள தான்கோ மாகாணத்தில் தைபூன் சூறாவளியினால் உடைந்த ஆற்றுத்தடுப்பை அடுத்து மீட்புப் பணியாளரும் குடியிருப்பாளரும் கூடியிருக்கின்றனர்

வியட்னாமை நேற்று சூறாவளி தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் பலத்த சேதமும் ஏற்பட்டுள்ளது.

கடலோரப் பகுதிகளை நோக்கி மணிக்கு 133 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளியினால் கடலில் பல அடி உயரத்திற்கு அலைகள் எழுந்து தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சூறாவளி தாக்கிய பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மரங்கள் மின் கம்பங்கள் சாய்ந்துள்ளன. விமானப் போக்குவரத்து இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சூறாவளி தாக்கும் என முன் கூட்டியே எச்சரிக்கப் பட்டதால் சுமார் மூன்று இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமாகியுள்ளனர்.

# பாக்தாத் அருகே குண்டுத்தாக்குதல்
# 9 பேர் பலி; 21 பேர் காயம்

(பாக்தாத்)

பாக்தாத் அருகே குண்டு வெடித்ததில் ஒன்பது பேர் பலியாயினர். மேலும் 21 பேர் காயமடைந்தனர். பாக்தாத் அருகே ஈராக்கிய பொலிஸ் படை தேர்வு செய்யும் மையத்தின் அருகே தற்கொலைப்படையைச் சேர்ந்த தீவிரவாதி வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினார். கடந்த மூன்று நாட்களில் மட்டும் வெடிகுண்டுத் தாக்குதலில் 61 பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பெருநாட்டில் பயங்கர பூமி அதிர்ச்சி
# கட்டடங்கள் தரைமட்டம் நால்வர் பலி

(லிமா)

பெரு நாட்டில் பயங்கர பூமி அதிர்ச்சி ஏற்பட்டதில் வீடு இடிந்து விழுந்ததில் நான்கு பேர் பலியானார்கள்.

அமெரிக்கா அருகேயுள்ளது பெருநாடு. இதன் வடபகுதியில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இந்திய நேரப்படி காலை 7.25 மணிக்கு பூமி குலுங் கியது. மோயோபாம்பா நகருக்கு 75 கிலோ மீற்றர் தூரத்தில் இதன் மையம் இருந்தது. இதன் வீரியம் 7.5 ரிக்டர் அளவில் இருந்ததாகவும் இது இரண்டு முதல் மூன்று நிமிடம் நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பூமி அதிர்ச்சியின் மையப் பகுதியிலிருந்து 715 கி.மீ தொலைவில் உள்ள தலைநகர் லிமாவிலும், பூமியதிர்ச்சியை உணர முடிந்தது.

லிமாஸ் நகரில் கிட்டத்தட்ட 20 இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தன. இதில் நான்கு பேர் பலியானார்கள். பூமியதிர்ச்சி காரணமாக மோயோ பாம்பா நகரில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது.

சாவு எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும். இன்னும் இது பற்றிய முழு விபரம் கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

2001ஆம் ஆண்டு ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் 75 பேர் பலியானார்கள். அப்போது ஏற்பட்ட சுனாமிப் பேரலைக்கு 26 பேர் பலியானார்கள்

அப்போது ஏற்பட்ட இழப்பு 1500 கோடி ரூபாய் ஆகும். 1970 ஆம் ஆண்டு ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் 70ஆயிரம் பேர் கொல்லப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் கைதிகள் துன்புறுத்தப்பட்டமைக்கு
# சிறைச்சாலை அதிகாரிகளே குற்றவாளிகள்

ஈராக்கின் அபு கிராய் சிறைச்சாலையில் கைதிகள் துன்புறுத்தப்பட்ட விடயத்தில் சிறைச்சாலை அதிகாரிகள் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தில் இங்கிலாந்து நாட்டவரான 22 வயதுடைய லின்ரி எனும் பெண்மணி ஏழு குற்றச்சாட்டுகளுக்குள்ளாகியுள்ளார். இவருடன் மேலும் ஒன்பது இராணுவ அதிகாரிகளும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தப் பெண்மணி மீது முதலில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் கடந்த மே மாதம் விசாரணைக்கு வந்ததையடுத்து அவர் ஓய்வு பெற்றார். இந் நிலையிலேயே அவர் மீது இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

# உயிருக்குப் பயந்து 1500 வைத்தியர்கள்
# ஈராக்கை விட்டு தப்பி ஓட்டம்

(பாக்தாத்)

**உயிருக்குப் பயந்து 1500 வைத்தியர்கள் மற்றும் தாதிகள் ஈராக்கை கைவிட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஈராக்கில் அமெரிக்கத் துருப்புகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே வன்முறை மோதல் நடந்து வருகின்றன. இதில் பலர் கொல்லப்படுகின்றனர். சிலர் காயமடைகின்றனர்.

காயமடைந்தவர்களைக் காப்பாற்றுவதற்கு வைத்தியர்கள் அவசியம். ஆனால் வைத்தியர்கள் வன்முறையால் தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சி ஈராக்கை விட்டு வெளியேறி வருகிறார்கள்.

2003 ஆம் ஆண்டு அமெரிக்க ஆக்கிரமிப்பு தொடங்கியது முதலே வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடத் தொடங்கினார்கள். கடந்த ஆண்டு மட்டும் 1500 வைத்தியர்கள், தாதிகள், பல்வைத்தியர்கள் ஈராக்கை விட்டு வெளியேறினர்.

இந்த ஆண்டு வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்ததும் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடும் வைத்தியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

ஈராக் வைத்தியர்கள் சிண்டிகேட்டின் மூத்த உறுப்பினரான ஆகிப் அல் அலூசி வைத்தியர்கள் வெளியேறுவதால் சமூகத்தில் ஏற்படப் போகும் பாதிப்பு குறித்து கவலை தெரிவித்தார்.

வைத்தியர்கள் எல்லோருக்கும் பொதுவானவர்கள். அவர்கள் தங்கள் கடமையைச் செய்வதற்கு எல்லாத் தரப்பும் அவர்களை அனுமதிக்க வேண்டும். ஆனால் அது இங்கு நடப்பதில்லை என்றும் அவர் கூறினார்.

வைத்தியர்களில் பெரும்பாலானவர்கள் ஜோர்டான் மற்றும் அரபு நாடுகளுக்குச் சென்றுள்ளனர். மற்றவர்கள் ஐரோப்பிய நாடுகளில் குடியேறியுள்ளனர்.

சிலர் ஈராக்கிலுள்ள குர்திஷ் பகுதியில் குடியேறியுள்ளனர். அங்கு சன்னி முஸ்லிம்கள் அதிகம் வசிக்காததால் வன்முறையும் அதிகம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியர்களின் கிளினிக்குகளில் ஈராக் வீரர்கள் புகுந்து தங்கள் சகாக்களுக்கு உடனடியாக மருத்துவம் பார்க்க வேண்டும் என்று துப்பாக்கியை நீட்டி மிரட்டுவார்கள். இதைக் கண்டித்து பலமுறை வைத்தியர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர் என்றும் வைத்தியர் ஆகிப்அல்அலூசி கூறினார்.

அத்தோடு, ஈராக் வைத்தியசாலைகளில் சாதன வசதிகள் இல்லாததும் மருந்துத் தட்டுப்பாடும் வைத்தியர்கள் ஓடுவதற்கு இன்னொரு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஷரோனுக்கு வெற்றி

காஸா நிலப்பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேற்றப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வலது சாரித் தலைவர் மற்றும் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனுக்குமிடையில் நடந்த திக்குட் கட்சியின் மத்திய கமிட்டி வாக்கெடுப்பில் ஏரியல் ஷரோன் 51க்கு 49 வாக்குகள் என்ற குறுகிய வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

# அயர்லாந்துவிடுதலை அமைப்பான ஐ.ஆர்.ஏ.
# ஆயுதங்களை இனி கையிலெடுக்காதாம்

ஐக்கிய அயர்லாந்திற்காக நீண்டகாலம் ஆயுதப்போராட்டத் தில் ஈடுபட்டுவந்த ஐ.ஆர்.ஏ. அமைப்பு இனி ஆயுதங்களை கையில் எடுக்காது என நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆயுதப்போராட்டங்களை கைவிடுவதாக அயர்லாந்து புரட்சிகர இராணுவம் கடந்த யூலை மாதம் பகிரங்கமாக அறிவித்தது. இதன் மூலம்வட அயர்லாந்தில் 30 வருடங்களாக இடம்பெற்று வந்த வன்முறைகளை முடிவிற்கு கொண்டுவந்து சனநாயக வழிமுறையை பின்பற்றவுள்ளதாக அயர்லாந்து புரட்சிகர இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன்படி பெருமளவிலான துப்பாக்கிகள், சிறு பீரங்கிகள், ஏவுகணைகள்,வெடிபொருட்கள் என்பன நிரந்தரமாகவே செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. ஆயுதங்கள் செயலிழக்கச் செய்யும் பணிகளில் தன்னுடைய குழு நாளொன்றுக்கு 18மணிநேரம் செயற்பட்டதாக ஆயுதங்களைக் கண்காணித்து வந்தகுழுவின் தலைவர் தெரிவித்துள்ளார் .



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வங்க தேசத்தில் தாகா பல்கலைக்கழக சுற்றுலா குழுவினர் அணிவகுப்பு.

# உலக வங்கித் தலைவரின்
# காதல் திருமணம் அம்பலமானது

(வோஷிங்டன்)

62 ஆவது வயது உலக வங்கித் தலைவரின் காதல் திருமணம் இந்தியப் பெண் அதிகாரியால் அம்பலமாகியுள்ளது.

அமெரிக்காவின் துணை இராணுவ அமைச்சராக இருந்த பால் உல்போவிட்ஸ் தற்போது உலக வங்கித் தலைவராகப் பணியாற்றி வருகிறார். இவருக்கு வயது-62.

உலக வங்கியின் வடக்கு ஆபிரிக்காப் பிரிவில் பணியாற்றி வருபவர் சுஹாரிசா கிட்டத்தட்ட 50 வயது ஆகின்றது.

இவர்கள் இருவருமே திருமணமாகி விவகாரத்துப் பெற்றவர்கள் நீண்ட காலமாக இருவரும் காதலித்து வந்தனர். கணவன்-மனைவியுமாகவும் வாழ்ந்து வந்தனர்.

சமீபத்தில் இவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டது தெரியவந்துள்ளது. அதுவும் ஒருவருக்கு ஒருவர் நேரில் பார்த்துக் கொள்ளாமல் திருமணம் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அமெரிக்க பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிக்குத் தப்பிய இவர்களது திருமண இரகசியத்தை இந்தியாவைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர் அம்பலத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

# இந்தியர் ஒருவர் பலி;

(வோஷிங்டன்)

நியூயோர்க்கில் உள்ள ரொட்டிக் கடையில் காசாளராகப் பணியாற்றிய இந்தியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்இது குறித்து நியூயோர்க்கில் இருந்து வரும் நாளிதழ் செய்தியில் கூறியிருப்பதாவது; குயின்ஸ் பகுதியில் வொண்டர் ரொட் டிக்கடை உள்ளது இங்கு கேரளாவைச் சேர்ந்த ஜோர் குருவில்லா என்பவர் காசாளராகப் பணியாற்றி வருகிறார். கடந்த ஞாயிறு இரவு அவர் கடையில் இருந்தபோது அடையாளம் தெரியாத இரண்டு மர்ம நபர்கள் கடையில் புகுந்து கடையை கொள்ளை அடிக்க முயன்றபோது, குருவில்லா கடைக்கு வெளியே ஓடி வந்து மற்றவர்களின் உதவி கோரியுள்ளார். உடன் கொள்ளையடிக்க வந்தநபர்கள் அவரை துப்பாக்கியால் சுட்டனர் அதில் சம்பவ இடத்திலேயே ஜோர்ஜ் குருவில்லா இறந்தார்

# மன்னார் எழுச்சி மாநாட்டில் மக்களை அணி திரள அறைகூவல்

**(மன்னார்)**

**மன்னாரில் இன்று நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டில் மாவட்ட மக்கள் அனைவரும் உணர்வு பூர்வமாக தமது எழுச்சியையும் ஒற்றுமையையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்ட அணிதிரண்டு வருமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அறைகூவல் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

நீடித்துக்கொண்டிருக்கும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதில் அரசாங்கம் தொடர்ந்தும் இழுபறி நிலையையேகடைப்பிடித்து வருவது கண்கூடு.

தற்போதைய அரசாங்கத்தின் சனாதிபதி வேட்பாளரினது ஜே.வி.பி உடனும், ஜாதிகஹெல உறுமயவுடனுமான ஒப்பந்தங்கள், தமிழ் தேசிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான கதவுகளை மூடுவதாகவே அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் என்ற நம்பிக்கையைத் தமிழ் மக்கள் இழந்து விட்டனர். ஆட்சிக்கு வந்த அனைத்து சிங்கள அரசாங்கங்களினாலும், தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டது போன்றும், ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டது போன்றதுமான நிலையே தற்போதும் உருவாகிக் கொண்டு வருவதையே காணக்கூடியதாக உள்ளது.

சர்வதேச சமூகம் இவ் விடயத்தில் தலையிட்டு தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமையை பெற்றுத் தரவேண்டும் என்பதை தமிழ் மக்கள் ஏகோபித்து ஒற்றுமையுடன் குரல் கொடுத்து சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டும் வகையிலேயே பொங்கு தமிழ் தேசிய எழுச்சி மாநாடுகள் தமிழீழமெங்கும் நடாத்தப்பட்டு வருகின்றன. வவுனியாவில், கிளிநொச்சியில், முல்லைத்தீவில் மக்கள் வெள்ளம் திரண்டு வந்து தமிழர் எழுச்சி மாநாட்டை நடாத்தி முடித்துச் சர்வதேச சமூகத்திற்கு நாம் அனைவரும் ஒன்று பட்டு விட்டோம் என்பதை எடுத்துக்காட்டியுள்ளனர்.

இன்று மன்னார் மாவட்டத்திலும், தமிழ்தேசிய எழுச்சி மாநாடு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மாவட்ட மக்கள் அனைவரும் அணி அணியாகத் திரண்டு வந்து இவ் எழுச்சி மாநாட்டில் உணர்வு பூர்வமான எழுச்சியுடன் கலந்து கொள்வதன் மூலம் எமது ஒற்றுமையை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நடமாடும் சேவை மூலம் காணி சம்பந்தமான நடவடிக்கைகள்

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலக காணிஅலுவலகத்தினரால் நடமாடும் சேவைகள் மூலம் காணி சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் நாளை உதயநகர் மேற்கு,கிழக்குகிராம மக்களுடைய காணி உரிமப்பத்திரம் (எல்.டி.ஓ.பொமிற்) கையொப்பமிடும்நிகழ்வு உதயநகர் கிழக்கு மேற்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபங்களில் வைத்தும், 30ஆம் திகதியன்று கனகாம்பிகைக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில்வைத்து கனகாம்பிகை குளம் கிராம காணி சம்பந்தமான நடவடிக்கைகளும் நடைபெறவுள்ளதென கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலர் தெரிவித்துள்ளார். (சோ)

# 2ஆம்.லெப்.கதிர்ச்செல்வன் கல்வி நிலையம் திறப்பு

தமிழீழ மாணவர் அமைப்பினரால் 2ஆம் லெப்.கதிர்ச்செல்வன் கல்வி நிலையம் முழங்காவில் வலைப்பாட்டுக் கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.அப்பகுதி மாணவர்களின்கல்வி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம், திரைப்பட வெளியீட்டுப்பிரிவு ஆகியவற்றின் உதவியோடு இக்கல்வி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இக்கல்வி நிலையம் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு வலைப்பாடு பங்குத் தந்தை மலர் மாலை அணிவித்ததைத்தொடர்ந்து கல்வி நிலையத்தை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். கல்வி நிலையத்திக்கான தளபாடங்கள். தமிழீழ வனவளப் பாதுகாப்பு பிரிவினரால் அன்பளிப்பு செய்யப்பட்டன.இக் கல்விநடவடிக்கைகளை வலைப்பாடு இளைஞர்ஒன்றியத்தினர், கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்பின் மேற்பார்வையுடன்ஒழுங்குபடுத்தினர்.

# கிராம மக்களின் பங்களிப்புடன் தேவைப்பகுப்பாய்வு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித்திட்ட நிதிப்பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அபிவிருத்தி செய்யப்படவுள்ள குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நான்கு கிராமங்களில் ஒன்றான செந்தூர் கிராமத்தில் கடந்த 22ஆம் திகதி காலை 10.00 மணியளவில்மக்கள் பங்களிப்புடனான கிராமத் தேவைப் பகுப்பாய்வு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

கிராம உத்தியோகத்தர் இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரங்கநாதன், சமூக சேவை உத்தியோகத்தர் பி.சுதன் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.சதின் மற்றும் தமிழர்புனர்வாழ்வுக்கழக மாவட்ட திட்ட அலுவலர் வே.கலைவர்ணன் அவர்களும் கலந்துகொண்டு நிகழ்வை வழி நடத்தினர். தமிழர் புனர்வாழ்வுக்கழக வடக்கு கிழக்கு கரையோரச் சமுதாய அபிவிருத்தித்திட்ட இணைப்பாளர் பணியாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கேணல் சங்கரின் நினைவுத்தூபி முத்துஜயன்கட்டு– ஜீவநகரில் திறப்பு

(ஒட்டுசுட்டான்)

கேணல் சங்கர் அவர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முத்துஜயன்கட்டு தேசிய எழுச்சிப்பேரவையினரால் நிறுவப்பட்ட நினைவுத் தூபிநேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

முத்து ஜயன் கட்டு ஜீவநகர் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வின் பொதுச் சுடரினை ஜீவநகர் கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் மு. இராசையா ஏற்ற, தேசியக்கொடியினை தூயவன் அரசறிவியல் கல்லூரிப்பொறுப்பாளர் பார்த்தீபன் ஏற்ற தூபியின் பெயர்க் கல்லினை மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் திரைநீக்கம் செய்துவைத்தார்.தூபியில் நிறுவப்பட்ட திருவுருவப்படத்தினை கேணல் சங்கர் அவர்களின் துணைவியார் திரைநீக்கம்செய்து வைத்தார். கருத்துரைகளை ஊடகப்பேச்சாளர் சி.வேதவனம், வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்ச. கனகரத்தினம் தூயவன் அரசறிவியல் கல்லூரிப பொறுப்பாளர் பார்த்திபன், முல்லை மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஆற்றியதை தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (05)




# அரச பேருந்து சேவை சீரற்ற நிலையில்

## பா.உ துரைரட்ணசிங்கம்

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அரச பேருந்துசேவை சீர்குலைந்திருப்பதாகவும் திருகோணமலை,மூதூர்,கிண்ணியா மற்றும் கந்தளாய் ஆகிய இடங்களில்உள்ள பேருந்து கம்பனிக்கு சொந்தமாக பேருந்துகளில்75 சதவீதமானவை பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் திருகோணமலை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவுக்குஅனுப்பிய கடிதம் ஒன்றில்தெரிவித்துள்ளார்.

போதிய பேருந்துகள்இல்லாததால் திருமலை, கந்தளாய்,மூதூர் கிண்ணியா ஆகிய இடங்களிலுள்ள பஸ்பேருந்து சேவை நிலையங்களினால் திருப்திகரமான பேருந்துசேவையை நடத்த முடியாதிருக்கின்றது. யுத்தம் மற்றும்கடற்கோளினால் சீரழிந்த நிலையில் திருமலை மாவட்டம் காணப்படுகிறது.இப்போது இம்மாவட்டத்தில் புனர்வாழ்வு, மீள் கட்டுமானம், மீளக்குடியமர்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போதிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் இப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளமுடியாத நிலை இங்கு காணப்படுகிறது மக்களுக்கு ஆகக் குறைந்தபட்ச போக்குவரத்துச்சேவையை வழங்குவதற்காக புதிதாகக் கிடைக்கும் பேருந்துகளில் ஒருதொகுதியையாவது திருகோணமலை மாவட்டத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் தனது கடிதத்தில் கேட்டுள்ளார். கடிதத்தின் பிரதி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் வாழும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் அனுசரணையுடன் முல்லை மக்கள் நலன்புரிச்சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் சேரன் வாணிபத்தினரால் கஸ்ணப்பாடு தற்காலிக குடியிருப்பில் அங்கர் பால் மா வழங்கப்பட்டபோது (20)

# மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(அம்பாறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீனவர்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட "மீண்டும் கடலை நோக்கி" எனும் செயற்திட்டத்தினூடாகச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் ஏனைய இடங்களிலுள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மீனவர்களுக்கும், மீன்பிடி உபகரணங்களை வழங்கி வருகின்றது.

அதற்கமைய கடந்த 22ஆம் திகதி காலை 10.30 மணியளவில் சொறிக் கல்முனையிலுள்ள மீனவர்களிற்கு 60 வீச்சுவலைகளையும்,அதற்கான இதர பொருட்களையும் வழங்கியது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் மீன்பிடி அபிவிருத்தி உத்தியோகத்தர் யோகராசா தினேஸ், அம்பாறை மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கச் சமாசத் தலைவர் இளையதம்பி துரைராசா ஆகியோர் கலந்து கொண்டு மீனவர்களுக்கான பொருட்களை வழங்கியுள்ளனர்.

# உயிலங்குளம் சோதனைச்சாவடி இன்று இரவு 10 மணிவரை திறந்திருக்கும்

இன்று மன்னாரில் நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சி நாளையிட்டு உயிலங்குளம் சோதனைச்சாவடி இரவு 10.00 மணிவரை திறந்திருப்பதற்கு இராணுவம் இணங்கியுள்ளது. தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் மன்னார் சிறிலங்காப் படையதிகாரிகளும் பங்கேற்ற கலந்துரையாடலிலேயே இராணுவம் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியிலிருந்து தேசிய எழுச்சி நிகழ்வுக்கு வருகை தரும் மக்களின் போக்குவரத்து தொடர்பாக நேற்று முன்தினம் இந்தக் கூட்டத்தில்முக்கியமாக விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது.



முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட செல்வபுரம் கிராம மக்களுக்கு கரித்தாஸ் நிறுவனத்தால் அமைக்கப்படவுள்ள நிரந்தர வீட்டிற்கான அடிக்கல்லினை கடந்த 17ஆம் திகதி அன்று முல்லை நகர தமிழீழ கடற்படைத் தளபதி தினேஷ் நாட்டிவைத்தபோது. (20)

# எமது எண்ணங்கள் ஒன்று சேரட்டும் தமிழ்தேசிய உணர்வு பொங்கட்டும்

**- யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம்**

**(யாழ்ப்பாணம்)**

**வவுனியா தமிழ்தேசிய எழுச்சி மாநாட்டுப் பிரகடனத்தை வலி யுறுத்தி யாழ்.குடாநாட்டில் நடைபெற இருக்கும் பொங்குதமிழ் நிகழ்வில் பங்கெடுப்போம். எமது எண்ணங்கள் ஒன்று சேர ட்டும். தமிழ்தேசிய உணர்வு பொங்கட்டும்,சர்வதேசமே எமது உரிமைகளை அங்கீகரி என ஓங்கி ஒலிக்க குரல் எழுப்புவோம் என யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர்சங்கம் தெரிவித் துள்ளது.**

இது தொடர்பாக அவர்கள் வெளி யிட்டுள்ள அறிக்கையில்:

நீண்ட நெடும்காலமாகப் போராடி வரும் எமது தமிழ்த்தேசிய இனம் போராட்டத்தின் வெற்றி இலக்கை எட்டக் கூடிய ஒரு வரலாற்றுக் கட்டத்தைச் சந்தித்து நிற்கின்றது.

காலங்காலமாக பல வடிவங் களாலும் முன் னெடுக் கப் பட் டு வந்ததமிழர் உரிமைப் போராட்டங் கள் சிங்கள இனவாத சக்திகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்த போதெல்லாம் அடக்குமுறைகளை எமது உரிமைக்கான போராட்ட வழி முறைகளால் தகர்த் தெறியப்பட்ட போது சிங்களதேசம் ஆட்டம் கண்டது.இதன் விளைவாக வந்த சமாதானத்தையும் தமிழர்தேசம் வர வேற்றுக் கொண்டது. எமது எதிர்பார்ப் புக்கள், பிரச்சினைகள் தீர்க்கப் படாமல் இழுத்தடிப்புக்கள் மூலம் எமது போராட்டத்தைச் சிதைக்கின்ற சதி நடவடிக்கைகளை மாறிமாறி வந்த சிங்கள அரசுகள் மேற் கொண்டன.

சர்வதேசத்திற்கு ஒரு முகத் தையும் தமிழர்களுக்கு ஒரு முகத் தையும் காட்டி வந்த சிங்கள ஆட்சி யாளர்களின் இரட்டை வேடங்களை சர்வதேசம் உன்னிப்பாகஅவதானித்து வருவது எமக்கு மிகவும் சாதகமான- ஒன்றே.இதேவேளையில் வெட்டி வீழ்த்தப்பட்ட ஆட்டுக்கடா உயிர் பிரி யும் நேரத்தில் தனது இறுதி முழு மூச்சையும் ஒன்றுசேர்த்துப் பலமாக வெளிப்படதுடிதுடித்து இறப்பது போல் சிங்களப் பேரினவாதம் தெற்கில் தனது முழு மூச்சையும்ஒன்று சேர்த்து வருகின்றது. இத்தருணத்தில் உரிமைக்காகப்போராடி வரும் எமது தேசத்து மக்கள் இறுதி வெற்றி இலக்கை எட்டக்கூடிய பலத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று காத்து நிற்கின்றது.அதைத் தவற விடு வோமாயின் வரலாற்றை இழந்த வராகி விடுவோம் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (33,37)

# சுகாதாரத் தொண்டர்களுக்கு யாழ்.மாவட்டத்தில் நேர்முகத்தேர்வு

யாழ். மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றுபவர் களை சிற்றூழியர்களாக சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று முதல் அடுத்த மாதம் நாலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. 722 தொண்டர்களுக்கு சுகாதார வைத் திய அதிகாரி பிரிவு ரீதியாக அந்தந் தப் பிரதேசத்தில் குறிப்பிட்ட நிலை யங்களில் நேர்முகப் பரீட்சை நடை பெறவுள்ளது.

இன்று சுகாதார வைத்திய அதி காரி பணிமனை, பருத்தித்துறை, நாளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய், எதிர்வரும் முதலாம் திகதி சுன்னாகம் பொது நூலகம், இரண்டாம்திகதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை கோப் பாய், மூன்றாம் திகதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊர்காவற்துறை, நான்காம் திகதி சுகாதார வைத்தியஅதிகாரி பணி மனை, சாவகச்சேரி சுகாதாரசேவை கள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணி மனை, யாழ்ப்பாணம்.

நேர்முகப் பரீட்சைக்கான அனு மதிக் கடிதங்கள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் வழங்கப் படுகின்றது என பிரதி மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் தெரி வித்துள்ளார்.

# புத்தர் சிலையை ஆயுத ஆதிக்க கருவியாகப் பயன்படுத்தாதீர்

**- தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர்**

(யாழ்ப்பாணம்)

புத்தர்சிலையை ஆயுதஆதிக்க கருவியாகப் பயன்படுத்தாதீர் தமிழர் கள்புத்த பெருமானைப் பற்றி அறி யாதவர்கள் அல்ல, அவர்களுக்குப் புத்த பெருமானைக் காட்டி புதுப்பாடம் கற்பிக்க நினைக்காதீர்கள்.ஏனெனில் தமிழர்கள் பழங்காலந்தொட்டே தமிழர்களது நூல்கள் பலவற்றில் அதைப்படித்திருக்கின்றார்கள். என தென்னிந்தியத் திருச்சபையின் முன் னாள்பேராயர்கலாநிதி எஸ்.ஜெப நேசன்தெரிவித்துள்ளார்.

தமிழர் தாயகப் பகுதியில் திட்ட மிட்ட வகையில் புத்தர் சிலைகள் சிங்களப் பேரினவாதிகளால் நிறுவப் பட்டுவருகின்றன. கிழக்கு மாகா ணத்தில் தொடங்கியபுத்தர் சிலை விவகாரம் வடக்கில்- குறிப்பாக யாழ்.- சுன்னாகம் வரை விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றது. இப்போதெல்லாம் தமிழர் தாயகப்பகுதிகளில் புத்த பெருமான் திடீர்திடீரென்று முளைத் தெழு கின்றார்.பின் அதிலேயே வேரூன்றி இருக்க ஆசைப்படுகிறார். போக மாட்டேன் என்றுஅடம் பிடிக் கின்றார். ஒரு ஆன்மீக வாதத்தை ஆயுத ஆதிக்க வாதமாக மாற்ற நினைப்பது எமக்கெல்லாம் வெறுப் பைத்தருகிறது என அவர் தெரி வித்துள்ளார். (37)

# தனியார் கல்வி நிலையங்கள் குறித்து யாழ். இல் விபரம் திரட்டும் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள தனி யார் கல்வி நிலையங்கள் குறித்து படையினர் விவரம் திரட்டி வரு கின்றனர். படையினரின் இந் நட வடிக்கை குறித்து கல்வி நிலைய நிர்வாகிகள் கடும் கண்டனம் தெரி வித்துள்ளனர்.கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறித்து படையினர் பெயர்,முகவரி என்பவற்றை பெற முயற்சிப்பதாகவும் சில கல்வி நிலை யங்களும் அச்சத்தின் காரணமாக இது குறித்த தகவல்களை கொடுத்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. படையினரின் இத்தகைய நடவடிக் கைகளுக்கு பல கல்வி நிலை யங்களில் நிர்வாகிகள் கடும் கண் டனம் தெரிவித்துள்ளதுடன் படை யினரின் இத்தகைய நடவடிக்கைகள் மாணவர்கள் மற்றும் பெற்றோர் களிடத்திலும் பெரும்விசனத்தை தோற்று வித்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (28)

## யாழ்.மாவட்டத்திற்கு புதிய பதிவாளர் நியமனம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பதிவாளராக கடமைபுரிந்துவரும்திருமதி நாகேஸ் வரி செல்வராசா எதிர்வரும் முத லாம் திகதிமுதல் யாழ்மாவட்ட பதி வாளராக பொறுப்பேற்கவுள்ளார்.

இவர்கடந்த 1996ஆம்ஆண்டு முதல் கிளிநொச்சி மாவட்ட பதி வாளராக கடமை புரிந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

## தேர்வுப் பரீட்சை

சைவசித்தாந்த பிரவேச, பால பண்டிதர்தேர்வு-2006 இதற்கான விண்ணப்பங்கள் யாழ்.சைவ பரி பாலனசபையால் கோரப்பட்டு ள்ளது.

இத்தேர்வுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி அடுத்த மாதம் 15 ஆம் திகதியாகும்.

2006 ஆம் ஆண்டு வைகாசி முதலாம் வாரத்தில் தேர்வுகள் நடைபெறவுள்ளன.

விண்ணப்படிவம், பாடவிதானம் என்பவற்றை 66, கஸ்தூரியார் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சபை காரியா லயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

# நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று மாமுனைகலைமகள் சனசமூக நிலையத்திற்கு தளபாட கொள்வன விற்கென தமிழ்தேசிய பாராளுமன்ற உறுப்பினர் இ.சிவனேசன் 25ஆயிரம் ரூபாவையும் மாமுனை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு தளபாட கொள்வனவிற்காக பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் 30 ஆயிரம் ரூபாவையும் இவ் வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய் துள்ளார்கள். (கா)

# பாடசாலைகளை புனரமைப்பதில் தொண்டர் அமைப்புகள் அசமந்தம்

(வடமராட்சி)

யாழ். வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்டு சேதமடைந்துபோயுள்ள பாடசாலைகளை மீள்நிர்மாணம் செய்வதில் தொண்டர் அமைப்புக்கள் அசமந்தப் போக்குடன் நடந்து கொள்வதாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் செல்வராஜா விசனம் தெரிவித்துள்ளார்.

சுனாமி ஆழிப்பேரனர்த்தம் கார ணமாக வடமராட்சி கல்வி வலயத் தைச் சேர்ந்த 11 கடற் கரையோர பாடசாலைகள் சேதமாக் கப்பட்டன.

இவ்வாறு சேதமாக்கப்பட்ட பாட சாலைகளைப் புனரமைத்து மீள் நிர்மாணம் செய்வதாகக் கூறி பல நிறுவனங்கள் முன் வந்தன. இந் நிறுவனங்கள் சேதமான பாடசாலை களை மீள்நிர்மானம் செய்வதற்கான உறுதி மொழிகளையும் வழங்கின.

எனினும் அவற்றால் கூறப்பட்ட உறுதி மொழிகள் எதுவும் நிறை வேற்றப்படாதுள்ளதினால் கரை யோரப்பிரதேசப் பாடசாலைகள் தற் காலிக கொட்டகைகளிலேயே இயங்கி வருகின்றன.இதனால் இப் பகுதி மாணவர்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர். என கல்விப்பணிப் பாளர் மேலும் கூறினார். (33)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தேசியதரத்திலான இரத்தவங்கி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை யின் இரத்த வங்கியை தேசிய தரத்திலான இரத்தவங்கியாக தரமு யர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தேசியகுருதி மாற்று பிரயோக சேவைப்பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி எம்.பிந்துசாரா உறுதி யளித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்திய சாலை யின் இரத்த வங்கியில் நிலவுகின்ற பற்றாக்குறைகள் மற்றும் குறை பாடுகள் என்பவற்றை நேரில் சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

யாழ்.போதனாவைத்தியசாலை இரத்த வங்கியில் தற்போது நிலவு கின்ற தொழில் நுட்பவசதியீனங்கள், ஆளணிப்பற்றாக்குறைகள், இட வசதி இன்மைகள்என்பவற்றைப் போக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நாளாந்தம் பல்லாயிரக் கணக் கானோர் சிகிச்சை பெற வரும் யாழ். போதனாவைத்தியசாலையில் இயங்கும் இரத்தவங்கியின் சேவைகள் விஸ்தரிக்கப்பட வேண்டி யதன் அவசியத்தைஉணர்ந்தே இதற் குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன என்றும்அவர்கூறினார். (33)

# ஐஸ்கட்டி உற்பத்தி நிலையம் காரைநகரில் அமைப்பு

யாழ்.காரைநகரில் ஐஸ்கட்டி உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளன.

காரைநகரில் கணிசமானோர் கடற்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் நாளாந்தம் பிடிக்கும் கடல் உணவுகளைப் பதப்படுத்தி சந்தைப் படுத்துவதற்கான ஐஸ்கட்டிகளைப் பெறுவதில் இப்பகுதிகடற்றொழிலாளர்கள் பலவிதமான பிரச்சினைகள் எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக இப்பகுதி மீனவர்கள் தமது கடலுணவுகளைப் பதப்படுத்து வதற்கான ஐஸ்கட்டிகளைப் பெறுவதற்காக தூரப் பிரதேசங்களில் உள்ள ஐஸ்கட்டி உற்பத்திநிலையங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இவற்றால் காரைநகர் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சி னைகளைக் கவனத்தில் கொண்டே இந்த ஐஸ் உற்பத்தி நிலையத்தை அமைக்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (33)

# பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு அறிவாராய்ச்சி நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுப் பின்தங்கிப் போயு ள்ள கிராமங்களில் அறிவாராய்ச்சி நிலையங்களை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே-கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்-குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுப் பின்தங்கிய நிலை யில் உள்ள கிராமங்களில் வாழும் இளையோருக்கு சரியான அறிவியல் வழிகாட்டல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை இதனால் யாழ்.குடாநாட்டில் அறிவியல் வளர்ச்சி இன்றிய ஓர் இளம் சமு தாயம் தோன்றக்கூடிய அபாயகரமான சூழ்நிலை உள்ளது.

இதனை தவிர்க்கும் முகமாகவே யாழ்.குடாநாட்டில் அறிவாராய்ச்சி நிலையங்களை நிறுவ தீர்மானிக் கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் போரினால் பாதிக்கப்பட்டு பின்தங்கிய நிலையில் உள்ள பதினொரு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் இத் தகையஅறிவாராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்படும்.

இந்நிலையங்களில் நூலக வசதிகள், இணையத்தள சேவை வசதிகள், தொலைத்தொடர்பு சேவை வசதிகள், என்பன ஏற்படுத்தப்பட்டு இலவச சேவையாக இளையோரின் பயன்பாட்டுக்கு விடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (33)

# சனாதிபதித் தேர்தல்

## சுண்டப்படும் நாணயத்தில் — பூ விழுந்தால் என்ன? தலை விழுந்தால் என்ன?

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கான நாணயச் சுழற்சியில் பூ விழுந்தால் நல்லதா? தலை விழுந்தால் நல்லதா? என்பது தமிழ் மக்களைப்பொறுத்து தேவையில்லாத ஒரு ஆராய்ச்சி ஏனெனில், சிங்கள அரசியல்வாதிகள் எவர் ஆட்சிக்கு வரினும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதோ, சமாதான முயற்சியில் முன்னேற்றம் என்பதோ காணப்படுவதற்கான சமிக்ஞைகள் எவையும் தென்படுவதாக இல்லை.

சிங்கள அரசியல்வாதிகளைப் பொறுத்து பெரும்பாலானோர் ஏன் அனைவரும் என்று கூடச் சொல்லலாம் தமிழருடன் யுத்தநிறுத்த விடயம் ஒன்றில் மட்டுமே இணக்கப்பாடான போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.இவ் விடயத்தில் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் கூட இராணுவத்தீர்வைப் பற்றிச் பேசிஇனும் யுத்தத்தை உடன் ஆரம்பிக்கவோ நடத்தவோ அவை தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு இருப்பின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷாவிற்கு தற்போது யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றோ அன்றி சனாதிபதியானவுடன் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றோ நிபந்தனை விதித்திருப்பார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ தலைமயிலான தேர்தல் கூட்டணி யுத்தநிறுத்த உடன்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வருவது பற்றிப் பேசுகின்றதே ஒழிய யுத்த நிறுத்தத்தை உடன் முறித்துக் கொள்வது பற்றிப் பேசுவதாகவில்லை.

அதாவது சிறிலங்கா கூட்டமைப்பில் தமக்குச் சாதகமாக அனைத்தும் இருப்பது போல் அன்றி தாம் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இருப்பது போல் யுத்தநிறுத்த உடன்பாடும் தமக்குச் சாதகமாக இருக்க வேண்டுமென அவை கருதுகின்றன. இதன் வெளிப்பாடே யுத்தநிறுத்த உடன்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வருதல் வேண்டும் என்பதாகும்.

ஏனெனில் சிங்கள அரசியல் வாதிகளுக்கு யுத்தநிறுத்த உடன்பாடு தேவையாகவே உள்ளது. இதற்குப் பல்வேறு காரணங்களும் தேவைகளும் உள்ளன. முதலில் யுத்தத்தில் வெல்ல முடியாது என்பது அவர்களுக்கு நன்கே தெரியும். அதாவது யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப் படுமானால் அதனால் ஏற்படப்போகும் உயிர், உடமை இழப்புக்கள் பற்றி அவர்கள் உணர்ந்தே உள்ளனர்.

இதனால் ஆட்சியில் இருப்பவர்கள் சந்திக்க வேண்டிய நெருக்கடிகள் பலவாகும்.ஒரு புறத்தில் எதிர்க்கட்சியின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாக வேண்டியதாக இருக்கும். இக்கண்டனமானது சிலவேளை யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பதாக இருக்கலாம். சிலவேளை, யுத்தம் முன்னெடுக்கும் வழிமுறை சரியற்றதென்பதாகவும் இருக்கலாம்.

இது ஒருபுறம் இருக்க சிங்கள மக்களின் சீற்றத்திற்குக் கூட ஆளாக வேண்டியதாக இருக்கும். உயிரிழப்புக்கள், பொருள் இழப்புக்கள் நிம்மதியற்ற வாழ்க்கை, சுதந்திரமும், பாதுகாப்பும் அன்றி போக்குவரத்து, நடமாட்டம் என்பன அவர்களுக்கும் பெரும் சீற்றத்தைத் தோற்றுவிக்கலாம். அமுலில் இருந்த யுத்த நிறுத்தத்தைக் கெடுத்துவிட்டதாகவும் அவர்கள் கொதிப்படையலாம். அதற்கும் அப்பால் ஏற்கனவே விலையேற்றத்தால் அவதியுறும் அவர்கள் யுத்தத்தின் காரணமாக அதிலும் வாழ்க்கைச் செலவுகளால் விரக்தியின் விளிம்பிற்கே செல்லலாம்.

இதனைத் தவிர யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் சர்வதேச சமூகத்தின் குறிப்பாகச்சிறிலங்காவிற்கு நிதியுதவி வழங்கும் நாடுகளினதும் கண்டனத்திற்கும் வெறுப்பிற்கும் ஆளாக வேண்டியவர்களாக இருக்கும். சிங்கள அரசியல் கட்சிகள் எவையுமே உதவி வழங்கும் நாடுகளுடன் பகைத்துக்கொள்ளவோ, அவர்களின் உதவிகள் தேவையில்லை என உதறித் தள்ளிவிடவோ தயாராக இல்லை.

ஜே.வி.பி வெளிநாடுகளின் சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவிகள் தொடர்பாகக் கடும் விமர்சனங்களை முன்வைத்த போதும் அரசாங்கத்தில் பங்கேற்றகாலத்தில் அவற்றைத் உதறித்தள்ளிவிடவில்லை. அரசாங்கத்தின் சார்பிலும். தனிப்பட்ட ரீதியிலும் உதவி வழங்கும் நாடுகளிடம், உதவியைப் பெற்றுக் கொண்டே இருந்தது. சனாதிபதித் தேர்தலுக்கென அமெரிக்காவில் ஜே.வி.பி நிதி திரட்ட முயற்சிகள் மேற்கொண்டமை இதற்கு உதாரணமாக சுட்டிக் காட்டத் தக்கதாகும்.

ஒருவகையில் யுத்தநிறுத்தம் தொடர்பாக ஜே.வி.பி கடைப்பிடித்த கொள்கையைப் போன்றே உதவி வழங்கும் நாடுகள் தொடர்பாகவும், திறந்த பொருளாதாரக் கொள்கை தொடர்பானதுமான கொள்கையைக் கொண்டிருந்ததெனலாம். அதாவது, யுத்தநிறுத்தம் பற்றி விமர்சித்தும், கண்டித்துக் கொண்டே அவற்றின் அனுகூலங்களையும். சாதகங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பது போன்றே, திறந்த பொருளாதாரக் கொள்கையையும்,தனியார் மயமாக்கலையும், வெளிநாட்டு உதவிகளையும் விமர்சித்துக் கொண்டும்அவற்றின் அனுகூலங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றது.

இவர்களின் இத்தகைய நிலைப்பாட்டினை வேறொரு வகையில் கூறுவதானால்- அதிகாரப் போட்டி, அதிகாரத்தைக் கைப்பற்றுதல், அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ளுதல் என்பவற்றிற்கு யுத்தநிறுத்தச் சூழலைப் பயன்படுத்திக் கொள்ளத்தயாராக இருக்கின்றனர். ஆனால், இனப்பிரச்சினைக்கென அன்றித் தமிழ் மக்களின் உடனடித் தேவைகள். மனிதாபிமானப் பிரச்சினைகள் என்பன தொடர்பாக எந்தவித தீர்வோ, முடிவுகளோ எடுக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை என்பதே யதார்த்தமாய் இருந்தது.

இந்த வகையிலேயே தற்பொழுது சனாதிபதித் தேர்தலும் எதிர்கொள்ளப்படுகின்றது. அதாவது யுத்தநிறுத்தத்தை ஆதரித்துப் பேசுகின்றவர்களும் சரி, யுத்தநிறுத்தத்தை விமர்சிப்பவர்களும் சரி உடனடியாக யுத்தம் ஒன்றிற்குச் செல்லத் தயாராக இல்லை. இதேவேளை தமிழ்மக்களின் உரிமைகள், அவர்களின் தேவைகள் குறித்தும், பேசுவதற்கும் தயாராகவில்லை. ஏன் தமிழர்தரப்புடன் தேர்தல் குறித்துத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூட அவர்கள் தயாராக இல்லை. ஐ.தே.கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுமே இத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டவையாகவே உள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பவற்றுடன் உடன்பாடுகளைச் செய்து கொண்டிருப்பதன் மூலம் தமிழ் மக்களிடம் இருந்து தான் விலகியிருப்பதையே விரும்புவது போன்று நடந்துகொண்டுள்ளார். தமிழ் அரச ஊழியர்களுக்கு அதனைக் கோரி ஒரு கடிதம் அனுப்பப்பட்டது மட்டுமே இதுவரையில் அவர் தமிழர் தொடர்பாக மேற்கொண்ட ஒரே ஒரு அணுகுமுறையாகும்.இதற்கும்அப்பால் இதுவரை சொல்லிக் கொள்ள எதுவுமில்லை. அவரது நடவடிக்கையாகவும் சிங்களவரைத் திருப்திப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

ஒட்டுமொத்தமாகவே அவரின் அணுகுமுறையானது, சிங்கள மக்களின் வாக்குகளைக் குறியாகக் கொண்டதாகவே உள்ளது. சிங்கள மக்கள், குறிப்பாகச் சிங்கள இளைஞர்களைத் திருப்திப்படுத்துவதன் மூலம் தனது வெற்றியை உறுதி செய்து கொள்ளலாம் என அவர் நம்புவதாகத் தெரிகின்றது. முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதில் கூட அவர் பெரும் ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

இதேவேளை அடுத்தபிரதான வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கா, யுத்த நிறுத்தம், சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பவை குறித்து இடையிடையே மேடைகளில் பேசிவரினும் அவரதும், அவரது கட்சியினதும் நடவடிக்கைகளும் முழு அளவில் சிங்கள வாக்காளர்களைக் கருத்திற்கொண்டதாகவே உள்ளன. அதாவது சிங்கள வாக்காளர்கள் மனங்களில் ஐ.தே.கவோ, ரணில் விக்கிரம சிங்கவோ தமிழர் தரப்புடன் கைகோர்த்துள்ளனர் என்றதோற்றப்பாடு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அக்கறை கொண்டதாகவே உள்ளனர்.

இதற்கு அண்மைய சம்பவங்களே போதிய எடுத்துக்காட்டாகும். குறிப்பாக அவசரகாலச் சட்டத்திற்கு ஐ.தே. கட்சி அளித்து வரும் ஆதரவு மட்டுமல்ல, அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள நெருக்கடியைக் கூட பாராளுமன்றத்தில் தெரிவிப்பதற்கு தனது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதியளிக்க அது தயாராக இருக்கவில்லை. இதனால் ஐ.தே.க. தமிழ்' பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தை விட்டுவெளியேறும் நிலையே உருவாகியது.

இதனைத் தவிர சமாதனப் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பன தொடர்பாக அண்மைக் காலத்தில் ஐ.தே. கட்சி வேட்பாளரும், எதிர்க் கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்திவரும் கருத்துக்களைக்கூட அவர் சிங்கள வாக்காளர்களைக் குறிப்பாக பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளையும் திருப்திப் படுத்தும் நோக்கம் கொண்டதாகவே உள்ளது.

எடுத்துக்காட்டாகச் சில நாட்களுக்கு முன் அநுராதபுரத்தில் நடந்த தேர்தல்பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய ரணில் விக்கிரமசிங்க, சுதந்திரக் கட்சியுடன் இணைந்து பொதுக்கொள்கை ஒன்றை உருவாக்கி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தனக்கு அனைவரும் வாக்களிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். இதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க கூற முற்பட்டுள்ளதென்ன? அதாவது இனப்பிரச்சினை விடயத்தில் சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டிற்கு மாறாக தான் செயற்படப் போவதில்லை என்பதே ஆகும்.இத்தனைக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்தராஜபக்ஷவோ பௌத்த-சிங்கள அடிப்படை வாதத்தைக் கையில் எடுத்துள்ள ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய என்பனவற்றுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார். ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு எனவும் தமிழர் தாயகம் என்ற பேச்சிற்கே இடமில்லை எனவும் கூட்டணி கூறுகின்றது. அவ்வாறானால், ரணில்விக்கிரமசிங்கவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இக் கட்சிகளின் நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகின்றார் என்றே கொள்ள முடியும்.

இதனைத்தவிர கடந்த ஞாயிற்றுக்கிழமை ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள கருத்தானது சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதையே உறுதிசெய்தது போல் உள்ளது. அதாவது, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லும்போது ஜே.வி.பியினரையும் அழைத்துச் செல்லத் தயாராக இருப்பதாகவும் விடுதலைப் புலிகளுடன் அவர்கள் இணக்கப்பாடான முடிவொன்றிற்கு வருவார்களேயானால் அதனை அமுல்படுத்தத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்காவின் இப்பேச்சு அவரை எதிர்த்தரப்பினரின் கருத்துக்களையும் அரவணைத்துச்செல்ல முற்படுவதாக வெளிப்பார்வைக்குத்தென்படினும் அடிப்படையில்- பௌத்த சிங்களப் பேரினவாதத்தை அரவணைத்துச் செல்ல அன்றி பௌத்த-சிங்கள அடிப்படை வாதத்தை திருப்திப்படுத்தவும் சாந்தப்படுத்தவும் மேற்கொள்ளும் முயற்சியாகவே கொள்ளத்தக்கதாகும்.

அதாவது பௌத்த சிங்களப்பேரினவாதத்திற்கு தலைமை தாங்க முற்படும் ஜே.வி.பிக்கு முதன்மைஅளிப்பதாகக் கூறுவதன் மூலம், பேரினவாத சக்திகளைத்திருப்திப்படுத்தச் செய்யும் அதே வேளை. இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு என்பதை ரணில் விக்கிரமசிங்க தொலை தூரத்திற்கு விரட்டுகின்றார் என்றே கொள்ள முடியும்.

அச்செயற்பாடு பௌத்த-சிங்கள அடிப்படைவாதிகளுடன் மகிந்தராஜபக்ஷ எவ்வாறு உடன்பாடு செய்துகொண்டாரோ அதேபோல் இல்லாதுவிடில் அவர்களின் நிலைப்பாட்டிற்கு மாறானவன் அல்ல என்பதைக்காட்டிக்கொள்ள ரணில் விக்கிரமசிங்க முற்பட்டுள்ளார் எனலாம். இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க அடுத்த கட்டமாக ஜாதிகஹெலஉறுமய மற்றும் பௌத்த-சிங்கள தீவிர அடிப்படை வாதக் கட்சிகள் தொடர்பாகவும் இத்தகைய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாலும் ஆச்சரியப்படுவதற்கு ஏதுவுமில்லை.

இவ்வாறாக பௌத்த சிங்களப் பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்தும் முயற்சிகள் ஒருபுறம் இருக்க- இரண்டு சிங்கள சனாதிபதி வேட்பாளர்களும் தேர்தல் விடயத்தில் தமிழ் மக்களைக் குறிப்பாக இலங் கைத் தமிழ் மக்களை அணுகும் விதமும் ஒத்த விதமாகவே உள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்து சனாதிபதித் தோதல் ஆயினும் சரி, வேறு எந்த தேர்தலாயினும் சரி தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடித்தரமாட்டாது என்பது விளங்கிக்கொள்ளப்பட்ட விடயமாகவே உள்ளது. ஆயினும் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் பங்கேற்றனர் எனில் அதற்குச் சில குறிக்கோள்கள் இருந்ததன அதாவது விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டிய தேவையும். இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபைத் தேவை குறித்தும் அதற்குத் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு உண்டு என்பதை வெளிப்படுத்தவும் அது அவசியமானதாக இருந்தது.

ஆனால், தற்பொழுது தமிழ் மக்களுக்கு இத் தேர்தல் குறித்து எந்தவித கரிசனையும் இல்லை. தேர்தல் மூலம் வெளிப்படுத்த வேண்டிய எவையும் தமிழ் மக்களுக்கு இல்லை. அதே சமயம் இத்தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் தமிழ் மக்களின் , எதிர்பார்க்கைகள், கோரிக்கைகள் என்பவற்றை நிறைவு செய்பவர்கள் எனவும் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆகையினால் மக்கள் இதில் அக்கறைகொள்ளளதுவுமில்லை.

தமிழர் தரப்பில் நிலைமை இவ்வாறு இருப்பினும் கூட தமது தேர்தல் வெற்றிக்காகக் கூட சிங்கள வேட்பாளர்கள் தமிழர் தரப்பை வெளிப்படையாக அணுகத்தயாராக இல்லை என்பதும் குறிப்பிட்டுக் காட்டக் கூடியதொன்றே. அதாவது தமிழர் தரப்பிடம் ஆதரவு கோருவதென்பது சிங்களவர் மத்தியில் தமக்கு எதிரான பிரச்சாரத்திற்கு வாய்ப்பளித்துவிடுமென அவர்கள் கருதுகின்றனர்.

இதனால் தமிழ் மக்களின் வாக்கு வங்கிகளை விட குறைந்த வாக்கு வங்கிகளைக் கொண்ட மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளையும், முஸ்லிம் மக்களின் வாக்குகளையும், சில நூற்றுக்கணக்கான வாக்குகளைக் கொண்ட இடதுசாரிகளின் வாக்குகளையும் பெற்றுக்கொள்வதில் காட்டும் தீவிரத்தில் சிறிதளவாயினும் அவர்கள் காட்டவில்லை.இத்தனைக்கும் பல இலட்சம்வாக்காளர்களை இலங்கைத் தமிழ் மக்கள் கொண்டுள்ளனர்.

அதாவது தமிழ் மக்கள் வாக்களிக்கும் மனோநிலையில் உள்ளார்களோ இல்லையோ அவர்களை அணுக சிங்களத்தலைவர்கள் எவரும் தயாராக இல்லை.

சில ஊடகங்கள், தமிழர் தரப்புடன் ஒரு கட்சி தொடர்புகொண்டிருப்பதாக தகவல்களை வெளியிடுகையில் அதனை மறுப்பதில் தொடர்புகொண்டதாகக் கூறப்படும் கட்சி, அன்றி அக்கட்சியைச் சார்ந்தவர்கள் காட்டும் அக்கறை தீவிரமானது அலாதியானதாகவே உள்ளது. இவ்வாறு அவர்கள் தீவிரம் காட்டுவதற்கு எங்கே தமிழர் தரப்பிற்கும் தமக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டது என எதிர்ப்பிரச்சாரம் செய்து விடுவார்களோ என்ற அச்சமே காரணமாகும்.

இந்த வகையில் பௌத்த-சிங்கள் பேரினவாதத்திற்குப் பயந்து, அதனை அரவணைத்தும் செல்ல முற்படும் சிங்கள அரசியல்வாதிகள் யார்தான் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வொன்று காண முன்வருவார்கள். சமாதானம் என்பதும், யுத்தநிறுத்தம் என்பதும் அவர்கள் தம்மையும், தமது அரசாங்கங்களையும் நிலைநிறுத்திக்கொள்வதற்கான தேவையாக உள்ளனவே தவிர இனப்பிரச்சினை தீர்வில் முன்னேற்றம் எதையும் எட்டுவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் அல்ல பேரினவாதத்திற்கு அஞ்சி தமிழர் தரப்புடன் பேசுவதற்கே அஞ்சுபவர்கள் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்துச்செயற்படுவார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

இவற்றைச் சர்வதேச சமூகமும்புரிந்து கொள்ளுதல் கடினமானதல்ல. இவற்றைப் புரிந்துகொள்ளவோ/ ஏற்றுக்கொள்ளவோ முற்படாது சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் மீது கொடுக்கும் நிர்ப்பந்தம், அழுத்தம் என்பன தமிழ் மக்களின் உணர்வுகளுக்கும், உரிமைகளுக்கும் மாறாக அவை செயற்படுவதாகவே கொள்ள முடியும். அதாவது தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு ஒத்துழைப்பதாகவே கருத வாய்ப்புண்டு.

- ஜெயராஜ்




## 19-09-2005 25-09-2005

**19.**

☐ சிறிலங்கா புலனாய்வுத் துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வவுனியாவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை.

☐ இலங்கையின் வடக்கு கிழக்கில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆயுதக்குழுக்க ளிடமிருந்து சிறிலங்கா அரசு ஆயுதங்களை களைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நியூயோர்க்கில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தின் இறுதியில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு.

**20**

☐ மாங்குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கான நினைவுக் கேடயம் இப் பிரதேச மக்களால் வழங்கப்பட்டது.



☐ கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் தமிழீழ விடுதலைப் போருக்கான தேசிய அறைகூவல் மாநாடு கிளி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.



☐ தமிழீழ காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு தமிழீழ நீதி மன்றத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிசாரையும் அவர்களது உறவினர்கள் கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினர்.



☐ திருகோணமலை மாவட்டம் புல்மோட்டைப் பகுதியில் உள்ள சிறிலங்கா படையினரின் பாதுகாப்பு அரண் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரு படையினர் படுகாயம்.

☐ கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி ரூபி வலண்டினாவின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டது.

**21.**

☐ வடமராட்சி கிழக்கிலுள்ள லெப். கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் தமிழீழ கடற்படைத் துணைப்படையின் நான்காவது அணியினர் பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறினர்.

☐திருகோணமலையில் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பைக் கண்டித்து முழு அளவிலான கதவடைப்புப் போராட்டம் நடைபெற்றது

☐மட்டக்களப்பு வாழைச்சேனை விநாயகபுரத்தில் கிராம சேவை அலுவலர் ஒருவர் இனந்தெரியாதோரின் தாக்குதலில் பலி. மேலும் இருவர் காயம்.

☐வாழைச்சேனைப் பிரதேசத்தின் கறுவாக்கேணி கொண்டயங்கேணி சுங்காங்கேணி ஆகிய பகுதிகளில் படையினரும் பொலிசாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

☐ மட்டக்களப்பு இருதயபுரம் மேற்குப் பகுதியில் வீதிக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்காப் படையினர் மீது இனந்தெரியாதோர் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் நால்வர் படுகாயம்.

☐இலங்கை இனப்பிரச்சினை, ஒஸ்லோ பிரகடனத்திற்கு அமைய தீர்க்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் உள்ள சகல ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களும் களையப்பட வேண்டும் எனக் கட்டளை இட உதவி வழங்கும் நாடுகளுக்கு எந்த விதமான உரிமைகளும் கிடையாதென ஹெல உறுமய கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் தெரிவிப்பு.

☐ அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கு பாராளுமன்றத்தில் அங்கீகாரம்.

**22.**

☐ நாகர் கோவில் படுகொலையின் 10ஆவது ஆண்டு நினைவு கூரல் நாகர் கோவில் மகாவித்தியாலய தற்காலிக பாடசாலையில் இடம்பெற்றது.

☐அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றில் பொலிசார் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் பலி.

☐யாழ்.வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கடைாவில் வசிக்கும் வோட்டலு பல்கலைக்கழக மாணவனும், அவரது சகோதரரும் இனந்தெரியாதோரால் வாகனமொன்றால் மோதி படுகொலை செய்யப்பட்டனர்.

**24.**

☐ யாழ்பல்கலைக்கழக மாணவன்ஒருவரை முகமாலைச் சோதனைச் சாவடிப் பகுதியில் வைத்து இராணுவத்தினர் கைது செய்ய முற்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையே முகமாலை இராணுவ சோதனைச் சாவடிப் பகுதியில் பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.

☐ மீண்டும் பாஸ் கெடுபிடிகளைப் படையினர் அதிகரித்து வருகின்றமையும் சிவில் நிர்வாக நடவடிக்கையில் தலையீடு செய்து வருகின்றமையும் யுத்த நிறுத்த உடன்பாட்டினை அப்பட்டமாக மீறும் செயல் என யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹொக்லண்டுடன் பளையில் உள்ள விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் தெரிவிப்பு.



☐மட்டக்களப்பு, வெலிக்கந்த, மின்னேரியா ஆகிய பகுதிகளுக்கு இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட திடீர் விஜயம்.

**24.**

☐சுகயீனம் காரணமாக லெப்.கேணல் பிறையாளன்/சுட்டா சாவடைந்தார்.

☐ மட்டக்களப்பில் இனந்தெரியாத ஆயுதக் குழுவினரால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை.


☐ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தன்னாமுனைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மற்றும் பொலிசார் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை நடத்தினர்.


☐ தமிழீழ கடற்படைத் துணைப் படையின் தற்காப்பு ஒத்திகை வடமராட்சி கிழக்கில் இடம்பெற்றது.

**25.**

☐ யாழ். பொங்குதமிழ் நிகழ்விற்கு காரைநகரில் பிரச்சாரப் பணியில் ஈடுபடச் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்களை சிறிலங்காப் பொலிசார் திருப்பியனுப்பினர்.

☐ திருக்கோவில் பொத்துவில் சந்தியிலுள்ள பொது வைத்தியசாலைக்கு அருகில் உள்ள சிறப்பு அதிரடிப் படையினரின் காவலரண் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தினர்.







நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற தியாகி லெப்கேணல் திலீபன் நினைவு நிகழ்வில்.... (படங்கள்:-தவரட்ணம்)

# தியாகி திலீபன் கூறியவார்த்தைகள் இன்று சர்வதேச ரீதியாக வெடித்திருக்கிறது

### மட்டு.மாவட்ட துணைத்தளபதி ரமணன்.

(மட்டக்களப்பு)

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என தியாகி திலீபன் 18 வருடங்களுக்கு முன் கூறிய அந்த வீர வசனம் அவனது இலக்கு இன்று சர்வதேச ரீதியாக, வெடித்திருக்கின்றது இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட இராணுவத்துணைத் தளபதி ரமணன் தெரிவித்தார். மட்.திருப்பழுகாமத்தில் நேற்று நடைபெற்ற தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்;

தியாகி திலீபனின் இந்த நிகழ்வு தமிழீழத்தில் மட்டுமன்றி, தமிழர் வாழ்கின்ற அனைத்து இடங்களிலும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒரு காலத்திலும் இடம்பெறாத அளவிற்கு தற்போது, மக்கள் கூடி இருக்கின்றனர். இது எமது போராட்டத்தில் மக்களின் பங்களிப்பை வெளிப்படுத்துகின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில் எமது போராட்டம் ஆரம்ப காலமாகும். எமது போராட்டத்தின் பின் தளம் இந்தியாவில் இருந்த காலம். எம்.ஜி இராமச்சந்திரன் தமிழகத்தில் ஆட்சி செய்த காலம். இந்தக் காலத்தில் இந்திய அரசு பல இயக்கங்களை தங்கள் வசப்படுத்தி விலைக்கு வாங்கிய காலம். ஆனால். எமது தேசியத் தலைவர் மாத்திரம் அவர்கள் பக்கம் ஈர்க்கப்படவில்லை. அவர்களால் தேசியத் தலைவரை விலைக்கு வாங்க முடியவில்லை. இதனால் விடுதலைப்புலிகளை அழித்துவிட வேண்டும் என நினைத்திருந்தனர். இந்தக் கால கட்டத்திலேயே யாழ்ப்பாணத்தில் நெல்லியடியில் முகாம் கொண்டு இருந்த இராணுவத்தினர் மீது கரும்புலி மில்லர் தலைமையில் கரும்புலித் தாக்குதலை நடத்தினர். இதனால் நிலை குலைந்த சிங்களத் தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டார். இதுவே இந்தியப் படைகள் இங்கு வருவதற்கு சாதகமாக அமைந்தது.

எமது தேசியத் தலைவர் தீர்க்க தரிசனமான முடிவினை கொண்டு இருந்தார். இந்திய அரசு எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தரவரவில்லை. எமது மக்களை அடக்கி ஆளமுற்படுகின்றனர் என்பதை அறிந்திருந்தார். ஆனாலும் இந்தியாவின் வஞ்சகத்தனத்தினை உலகிற்கும் தமிழ் மக்களுக்கும் எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காக இந்த ஒப்பந்தத்தை செயற்படுத்த ஒத்துழைக்கச் சம்மதித்தார்.

ஆனால், அங்கு நடந்தது என்னவென்றால் இந்தியா இலங்கை இராணுவத்துடன் இணைந்து இருந்த இயக்கங்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டது. இந்தநிலையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தில் மோகம் கொண்டவர்கள் அல்ல அவர்கள் அகிம்சைப் போராட்டத்திலும் வல்லவர்கள் என்பதை காந்தியின் நாட்டினருக்கே காந்தியத்தால் பாடம் புகட்டினார் தியாகதீபம்திலீபன்.

சமாதானத்தின் வழியில் தீர்வு காண்பதை நாங்கள் விரும்புகின்றோம். எங்களது மக்களின் தன்னாட்சி அதிகார சபை அமைக்கப்படாதவரை எந்த விதமான பேச்சுக்களும் இல்லை. நோர்வே சமாதானத்தின் நடுநிலையாக இருக்கின்றது. இந்த நாட்டின் கருத்துக்களை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றோம். சிறிலங்காவின் தலைமைத்துவம் தளம்பல் நிலையில் இருக்கின்றது. ஆனால் எமது தலைமைத்துவம் உறுதியாக இருக்கின்றது! எமது தாயகம், தமிழீழம் என்பதில் உறுதியாக இருக்கின்றது. அதற்கு மக்களின் உங்களது பங்களிப்பு அவசியம். அதற்கு அனைவரும் தோள்கொடுக்க வேண்டுமென்றார்.


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30 பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வு
விடுதலைக்காய் ஏங்கும் தமிழீழ மக்களின் உரிமைநாள், யாழ்குடா நாட்டின் மக்கள் அனைவரும் ஒரே குரலாய் சொல்கின்றோம். எமது தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கும் தமிழீழத்தனியரசை சர்வதேச சமூகமே ஏற்றுக் கொண்டு அங்கீகாரம் வழங்கு...
சமத்துவமான சனநாயக நாடு தமிழீழம்
அனைத்து தமிழ் மக்களும் ஒரே தலைமையின் கீழ்
எமக்கென முப்படைகளையும் கொண்ட படை கட்டுமானம்
மொழி, நிலம், பண்பாடு கலாச்சாரம், சட்டம், நீதி
என சனநாயக மரபுகளைக்கொண்டு நடைமுறையில்
உள்ள தனியரசை உடன் அங்கீகரித்து ஏற்றுக்கொள்,
தமிழ்மக்களின் எழுச்சியாய் பொங்குதமிழ் 2005 எழுச்சி
நிகழ்வில் உலகே வியக்க உன்னத தமிழனாய் தலைநிமிர்ந்து
வாழ தனியரசு கோரி......
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வு
தமிழீழம் விடியலை நோக்கி நெருங்குகிறது. விலை மதிக்க
முடியாத வெகுமதியாய் எங்களின் தாயகக்கல்லறைகளில்
உறங்கும் தேசத்தின் தெய்வங்களின்கண்கள் திறக்கும் நேரம்
வருகிறது. ஒரு பெரும் புரட்சிகர தலைவனின் பின்னால்
புதிய எம் தமிழீழ தேசத்தினுள் பிரவேசிக்க தமிழ்மக்கள் தயாராகி
வருகின்றனர். அதன் ஒரு பரிணாமமே சர்வதேசத்தின் முற்றத்தில்
நின்று நீதிகோரும் மக்கள் எழுச்சி.
நியாயமான ஓர் இனத்தின், வாழும் உரிமை, மண்ணில்
தடுக்கப்பட்டால், மறுக்கப்பட்டால், பறிக்கப்பட்டால்
அத்தகைய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக
தணலையும் உணவாக விழுங்க-தமிழினம்
தயார் என உலகிற்குச் சொல் பொறியாகப்
புறப்படுங்கள்-தமிழர்களே
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
வலி. தென்மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம்-சண்டிலிப்பாய்
தலைமை அலுவலகம்-மாதகல்.
(சி.12921)



யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வு
நாம் பூரண விடுதலையை அடைகின்ற நாள் வெகுதொலைவில் இல்லை, யாழ் மண்ணில் பிறந்த குழந்தை முதல் முதியோர்வரை எம்முடைய சுதந்திர நாடுவேண்டி லட்சம் லட்சமாய் மக்கள் சேனை உரிமைக்குரல் எழுப்பி, சுதந்திர கானம் பாட உலகின்பார்வை முன்னால் அந்நியம் ஆகின்றோம்.
சர்வதேசமே! ஒன்றைப் புரிந்துகொள்இது மக்கள் புரட்சி நீரும் எரியும், நெருப்பும் ஆளும் நியாயம் எங்களின் பக்கம் சாம்பலிலிருந்து தமிழர் நாம் -சபதம் செய்கின்றோம், உரிமையைக் கொடு, இல்லை என்றால், அதை வென்றெடுக்க வழிவிடு பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வில் நெருப்பை மடியில் கட்டி தமிழ் இனமே விரைந்து வா...
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
வெண்மை வாணிப சங்கங்களின் யாழ்.மாவட்ட ஒன்றியம். இல-335 அரசடி வீதி-நல்லூர்.
(சி-12928)




யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
செந்நீர்கள் மீதும் கண்ணீர்கள் மீதும் நடந்து, தமிழீழம் கடந்த 50 ஆண்டுகளாய் சுதந்திர உரிமை கோரி தமிழீழ மக்கள் நிற்கின்றோம். துவக்குகள் மட்டுமே ஓய்வுகொள்ளும், ஒரு கொடிய சூழலாய் சமாதானத் தேரின் சக்கரம் நர்கின்றது. நகர்ந்து கொண்டிருக்கும் சமாதானத் தேரின் சக்கரங்களுக்குள் தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைகள் நசுக்கப் பட்டு வருகின்றன.
பொங்குதமிழ்-2005 எழுச்சி நிகழ்வு
போரும் இன்றி நிரந்தர அமைதியும் இன்றி தமிழ் மக்களாகிய நாம், முடக்கப்பட்டு இருக்கிறோம் நிரந்தரத் தீர்வை சர்வதேசமே வழங்கி தமிழீழ தனியரசை அங்கீகரி, இல்லையெனில் மக்களாகிய நாம் சமராடி எம் உரிமைகளை மீட்டெடுக்க வழிவிடு.
உண்மைகள் உறங்குவதுமில்லை
உரிமைகள் தூங்குவதுமில்லை
மக்களே போராளிகளாய் புறப்படுங்கள்
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவபீட
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கண்டிவீதி-சாவகச்சேரி.
(சி-12928)

# கங்குலி—சப்பல் பதவியில் நீடிப்பர் இந்திய கிரிக்கெட் வாரியம் அறிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணியில் சப்பல், கங்குலி நீடிப்பார்கள் என்று இந்திய கிரிக்கெட்வாரியம் அறிவித்துள்ளது. மும்பையில் கங்குலி, பயிற்சியாளர் சப்பல் பிரச்சினை குறித்து இருவரிடமும் தனித்தனியாக நேற்று விசாரணை செய்ய பி.சி.சி.ஐ. கூட்டம் கூடியது. பேச்சுவார்த்தைக்குப் பின் கங்குலி மற்றும் சப்பல் இருவரும் பதவியில் நீடிப்பார்கள் என்று கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் கூறியுள்ளது. இருவரும் தொழில் ரீதியான நட்புறவுடன் செயற்படுமாறு வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது. மேலும் ஊட கங்களில் தேவையற்ற சர்ச்சையை ஏற்படுத்தக்கூடாது என்றும் வாரியம் உத்தரவிட்டுள்ளது.

கங்குலி - சப்பல் விவகாரம் சிம்பாப்வே சுற்றுலாவின்போது பூதாகாரமாக வெடித்ததுடன் அணியில் இருந்து இருவரில் ஒருவர் வெளியேற்றப்படுவர் என்ற பரபரப்பான தகவல்கள் வெளியாகிய நிலையில் நேற்று நடைபெற்ற விசாரணையின் முடிவில் கங்குலி தொடர்ந்தும் இந்திய அணியின் தலைவராகவும், சப்பல் பயிற்சியாளராகவும் இருப்பர் என்ற அறிப்பு கிரிக்கெட் விமர்சகர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.






சவுரவ் கங்குலி தொடர்ந்து தலைவராக அணியில் நீடிக்க வேண்டும் பயிற்சியாளர் பதவியில் இருந்து சப்பலை நீக்கவேண்டும் என்று சமீபத்தில் கங்குலியின் சொந்த ஊரான கொல்கொத்தாவில் ஆர்ப்பாட்டம் செய்த ரசிகர்கள்.



தலைவர் கங்குலியை அணியிலிருந்து நீக்கக் கோரி பெங்களூரில் நடந்த கிரிக்கெட் ரசிகர்கள் ஆர்ப்பாட்டம் முன்னே நிற்கும் ஒரு பெரிய மனிதரை கவனித்தீர்களா இவருக்குக் கூடவா கங்குலியை பிடிக்கவில்லை.

# தென்னாபிரிக்க சுற்றுலா அணியில் கிறிஸ் கெயான்ஸ் இடம்பெறமாட்டார்



தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்யும் நியூசிலாந்து அணியில் கிறிஸ்கெயான்ஸ் இடம் பெறமாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டியின் பின் ஓய்வுபெற்ற அவரின் இடத்துக்கு ஜேம்ஸ் பிராங்லின் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

கெயான்ஸ் கிரிக்கெட் ஆட்டங்களில் ஈடுபடக்கூடிய உடற்தகுதியுடன் இல்லாதிருப்பதாக பயிற்றுநர் ஜோன் பிரான்ஸ்வல் தெரிவித்துள்ளார். அத்துடன் அவரை சந்தித்து உரையாடியபோது தற்போதைக்கு போட்டிகளில் ஈடுபடும் எண்ணமில்லை என்றும் தனது நோக்கம் 2007 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கெடுப்பதே எனத் தெரிவித்திருப்பதாக பிரங்வல் தெரிவித்துள்ளார்.

போட்டிகள் அடுத்த மாதம் நடைபெறும். அதன் பின்னர் 2006 ஆம் ஆண்டில் மூன்று டெஸ்ட் போட்டிகளில் இரு அணிகளும் பங்குகொள்ளும்.

# இந்தியாவுக்கான சிறிலங்கா சுற்றுலா 20 பேர் கொண்ட அணி அறிவிப்பு



அடுத்த மாதம் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் சிறிலங்கா கிரிக்கெட் அணியை தெரிவு செய்வதற்கென 20 பேர் கொண்ட பயிற்சி அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இங்கிலாந்து கவுண்டி அணியில் பிரகாசித்த மாலிங்க பண்டாவின் பெயரும் இடம்பெறுகின்றது. அத்துடன் சிறிலங்கா ஏ அணியில் சிறந்த பந்து வீச்சில் ஈடுபட்டுவரும் சஜீவ வீரக்கோனும் அறிவிக்கப்பட்டுள்ளார். ஏழு ஒருநாள் போட்டி களில் இரு அணிகளும் அக்ரோபர் நடுப்பகுதியில் கலந்து கொள்ளும்.

# சூப்பர் சீரிஸ் தொடர் இன்சமாம் ஆட மறுப்பு



அடுத்த மாதம் (ஒக்ரோபர்) ஐந்தாம்திகதி அவுஸ்திரேலியாவில் உலக 11பேர் அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையே ஆறு நாள் கொண்ட டெஸ்ட் போட்டி மற்றும் மூன்று ஒரு நாள் போட்டி கொண்ட தொடர் நடைபெறுகிறது.

இதில் உலக 11பேர் அணியில் ஒருநாள் போட்டிக்கு தென்னாபிரிக்க வீரர் பொலக்கும், டெஸ்ட் அணிக்கு சிமித்தும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு அணியிலுமே பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் பெயர் இடம் பெறாமல் இருந்தது. இதனால் அவர் தேர்வுக் குழுவினரை கடுமையாக விமர்சித்தார். அந்நாட்டு கிரிக்கெட் வாரியமும் அவருக்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான டெண்டுல்கர் காயம் காரணமாக சூப்பர் சீரிஸ் தொடரில் இருந்து விலகினார். இதனால் அவருக்குப் பதிலாக டெஸ்ட் போட்டிக்கான அணியில் இன்சமாம் சேர்க்கப்பட்டார். ஒரு நாள் போட்டிக்கான அணியில் ராவிட்டும் மேற்கிந்தியத்தீவு வீரர் கெய்லும் சமீபத்தில் சேர்க்கப்பட்டனர்.இதனால் கோபமடைந்த இன்சமாம் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஐ.சி.சி. விருது வழங்கும் விழாவிலும் தலைவர்கள் ஆலோசனைக்கூட்டத்திலும் பங்கேற்க மாட்டேன் எனக்கூறினார்.

இது தொடர்பாக இன்சமாம் கூறியதாவது;

சூப்பர் சிரிஸ் தொடரில் நான் எப்படி தேர்வானேன் என்பது தெரியும். ஒரு வீரர் ஆடவில்லை என்பதற்காக சேர்க்கப்பட்டுள்ளேன். முதலில் நான் பொருத்தமானவனாக தேர்வு செய்யப்படவில்லை. ஒரு போட்டியில் ஆட மட்டும் அவுஸ்திரேலியா செல்ல மாட்டேன். நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். இதனால் சூப்பர் சீரிஸ் தொடரில் விளையாட மாட்டேன் ஆசிய- ஆபிரிக்க கிரிக்கெட் போட்டியில் நல்ல மதிப்பு இருந்தது. அதனால் அப்போட்டியில் பங்கேற்றேன். சூப்பர் சீரிஸ் தொடரில் பங்கேற்காதது குறித்து கிரிக்கெட் வாரியத்திற்கு இன்னும் தெரியப்படுத்தவில்லை. அதற்கான அவசியமும் இல்லை என்றார்.

# அவுஸ்திரேலியாவை போன்றதே பாகிஸ்தானும்




கடந்த 26ஆம்திகதி நட்வெஸ்ட் கிரிக்கெட் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஒன்றில் இங்கிலாந்தின் முன்னணி வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அணித் தலைவர் மைக்கல் வோன், கெவின்பீற்றர்சன்,சைமன் ஜோன்ஸ் ஆகியோரைத் தவிர ஏனைய வீரர்கள் கலந்து கொண்டனர். அங்கு அவர்களுக்கு இராப்போசன விருந்தளிக்கப்பட்டது. அத்துடன் அன்று பிளிண்டொப்புக்கு சங்கத்தின் இவ்வருடத்துக்கான சிறந்த வீரர் என்ற விருது வழங்கப்பட்டது. எசக்ஸ் அணியின் இளம் வீரர் அலாஸ்ரர் குக் சிறந்த இளம் வீரருக்கான விருதைப் பெற்றார். கடந்த 25 வருட காலப் பகுதிக்கான சிறந்த வீரராக இயன் பொத்தம் அறிவிக்கப்பட்டார். நடுவர் டேவிட் செப்பேட் 2005 ஆம் ஆண்டுக்கான சிறந்த நடுவர் என்ற விருதைப்பெற்றார்.

இச்சந்தர்ப்பத்தில் கருத்துக்கூறிய அஸ்லி ஹைல்ஸ் பாகிஸ்தான் தொடருக்காக சிறந்த தயார்படுத்தலைச் செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளார். பிளிண்டொப் தெரிவிக்கும் போது, அவுஸ்திரேலியாவைப்போன்றே பாகிஸ்தானும் கடினமானதும், சவால் நிறைந்ததுமான அணியாக இருக்குமெனத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அடுத்தமாதம் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.



ஸ்பெயின் விட்டோரியா நகரில் நடந்த ஸ்பானிஸ் லீக் கால் பந்து போட்டியில் ரியல் மாட்ரிட் அணிவீரர் ரொனால்டோ, அலவேஸ் அணிக்கு எதிராக ஒற்றை கோல் அடித்தார். கோல் அடித்த மகிழ்ச்சியை தரையில் படுத்துக்கொண்டு ரொனால்டோ (இடது ஓரம்) கொண்டாட அவருக்கு [illegible]ர்கள் ரோடின்ஹோ, ராபர்டோ கப்லோவும் கொண்[illegible] [illegible]தை [illegible]க்கிறார் டேவிட் பெக்காம் (வலது)

# திணைக்களங்களுக்கிடையிலான மென்பந்து போட்டி அரையிறுதி போட்டிகளுக்கு அணிகள் தெரிவு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி திணைக்களம் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையில் நடாத்திவரும் 15 ஓவர் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட போட்டி அரையிறுதி ஆட்டத்தை எட்டியுள்ளது.

நேற்று நடைபெற்ற போட்டியொன்றில் கிளிநொச்சி வைத்தியசாலை அணியை எதிர்த்தாடிய கிளிநொச்சி கல்வித் திணைக்கள அணி வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு தெரிவானது. கிளிநொச்சி மத்திய மைதானத்தில் மாலை நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் ஆடிய வைத்தியசாலை அணி 14.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜெயராஜா 33, சதானந்தன் 15 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சுதர்சன், ஞான தயாளன், சிறிரமணன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் ராஜா மூன்று விக்கெட்டையும் வீழ்த்தினர்.




85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த கல்வித் திணைக்கள அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்று ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

துடுப்பாட்டத்தில் ஞானதயாளன் 37, சிவச்செல்வன் 14 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இவரைவிட சிறிரமணன் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜெயராசா, கோணேஸ்வரன் தலா ஒவ்வொரு விக்கெட் டை கைப்பற்றினர்.

அரையிறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன. முதலாவது அரையிறுதி காலை 8.00 மணிக்கு நீர்ப்பாசனத் திணைக்கள அணியை எதிர்த்து வீதி அபிவிருத்தி திணைக்கள அணியும், மாலை 3.30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழக அணியை எதிர்த்து கல்வித் திணைக்கள அணியும் மோதவுள்ளன.

## சிந்தனைக்கு



சத்தியத்திற்காகச் சாகத் துணிந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# கிராம சேவகரில் இருந்து பிரதமர் வரை!

சிறிலங்காவில் சுனாமி அனர்த்த மீளமைப்பிற்கான சர்வதேச உதவிகளைப் பயன்படுத்துவதில் பெரும் மோசடிகள் இடம் பெற்றுள்ளன. ஏற்கனவே வெளிவந்துள்ள தகவலின்படி பிரதமரில் இருந்து கிராம சேவகர் வரையில் அதாவது உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால்வரையில் இம்மோசடிகளில் சம்பந்தப் பட்டுள்ளனர்.

சிறிலங்கா கணக்குத் தணிக்கைக்குழுவின் தகவலின்படி மொத்தமாகக் கிடைக்கப் பெற்ற உதவிகளில் 13.5 சதவீதமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை பெரும் தொகையான நிவாரணப் பொருட்கள் காணாமற் போயுள்ளன. களவாடப் பட்டுள்ளமை திரட்டப்பட்ட பெருமளவான நிதிக்கு கணக்கு வழக்குகள் இன்மை, விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கான விபரங்கள் இல்லை, துறைமுகத்திலும், விமானத் தளத்திலும், காணாமற் போன பொருட்கள் மற்றும் தேங்கிக் கிடக்கும் பொருட்கள் எனப் பல்வேறு குறைபாடுகள் இக்கணக்குத் தணிக்கைக் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரச அதிகாரிகளின் நிர்வாகத் திறனின்மை, சிறிலங்கா அரச மட்டத்தில் காணப்படும் ஊழல் மோசடிகள் என்பன தற்பொழுது தான் அறியப்பட்ட விடயங்கள் அல்ல. சிறிலங்கா அதிகாரிகளின் இயலாமை, செயலின்மை குறித்து சர்வதேச அமைப்புக்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தன. மேலும் இவை சிறிலங்காவின் அபிவிருத்திக்குப் பெரும் முட்டுக் கட்டை ஆகியுள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டதுண்டு.

யுத்தம் நிறுத்தப்பட்டு யுத்த நிறுத்த உடன்பாடு அமுலில் இருந்த வேளையில் யுத்தத்தினால் அழிவுற்ற பிரதேசங்கள் புனரமைப்பு பற்றிப் பேசப்பட்டபோது இவ்விடயம் முதன்மை பெற்றது.

சில சர்வதேச நிதி நிறுவனங்கள் இதன் அடிப்படையிலேயே வடக்கு – கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தின் தேவையும், அவசியத்தையும் கூட வலியுறுத்தியிருந்தன. ஆனால் அதற்கு எதிராக பௌத்த- சிங்களப் பேரினவாத சக்திகள் பெரும் கூச்சல் எழுப்பினாவே ஒழிய அவற்றைத் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

இதேவேளை சிறிலங்கா பொலிஸ் திணைக்களமும், நிதித் துறையும் பெரும் ஊழல், மோசடி நிறைந்ததென ஏற்கனவே பெயர் எடுத்திருந்தன. அது மட்டுமல்ல யுத்த காலத்தில் ஆயுதக் கொள்வனவு போன்றவற்றில் பாதுகாப்பு அமைச்சில் இருந்தவர்களும், உயர் இராணுவ அதிகாரிகளும், பெரும் செல்வம் சேர்த்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்நிலையில் தற்பொழுது சுனாமி உதவி நிதி பிரதமரில் இருந்து கீழ் மட்ட அரச அதிகாரிகள் வரை தமது பங்கிற்கு மோசடியில் ஈடுபட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதென்லாம்.

ஆனால் இது எதிர்பார்க்கப்படாததொன்றல்ல. ஊழல் மோசடிகள் நிறைந்த நிர்வாகத்தில் பெரும் தொகையான பொருட்களும் நிதியும், கட்டுப்பாடற்று வந்து குவியும் போது இத்தகைய நிகழ்வுகளுக்குச் சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு. அது மட்டுமன்றி இனவாத நோக்கில் செயற்படும் ஆட்சியாளர்கள் பதவியில் இருக்கையில் கிடைப்பதில் பங்கிடப்படும் சிறிய அளவிலும் கூடச் சிறுபான்மையினருக்கு எதுவும் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. இதனைப் புரிந்து கொண்டமை காரணமாகவே கிடைக்கும் நிதி மற்றும் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டது.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இலகுவில் அதற்கு உடன்பட்டதாக இல்லை. சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இறுதியில் அதனை ஒப்புக் கொண்டாலும், அதனை நீதி மன்றத்தின் ஊடாக பின்னர் முடக்கி விட்டனர். அதாவது சிங்கள ஆட்சியாளர்கள் எத்தகைய ஊழல் மோசடிகள் இடம் பெற்றாலும்சரி, கிடைக்கப்பெற்ற பொருட்கள் களஞ்சியங்களில் கிடந்து அழிந்து போனாலும், அதனைத் தமிழ் மக்களுக்குப் பங்கிடத் தயாராக இல்லை என்பதே இதன் வெளிப்பாடாகும்.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படினும், இத்தகைய நிலை உருவாகலாம் என்பதை மனதிற்கொண்டு தான் சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்கு நேரடியாக உதவ வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் மக்கள் தரப்பில் முன் வைக்கப்பட்டது. ஆனால் சர்வதேச சமூகம் அத்தகைய முடிவெதையும் மேற்கொள்ளத்தயாராக இருக்கவில்லை.

ஆனால் தற்பொழுது சர்வதேச சமூகம் இதனை ஓரளவிற்கேனும், புரிந்து கொண்டுள்ளது போன்றே தெரிகிறது. இதன் வெளிப்பாடே அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி பில் கிளிண்டன், சிறிலங்கா அரசு பொதுக்கட்டமைப்பை அமுல் செய்யாமையினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் சென்றடையவில்லை எனக் கூறியுள்ளமையாகும்.

இவை ஒருபுறம் இருக்க தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான விடயத்திலும், இத்தகையதொரு அணுகு முறைகளையே சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் என்பது எதிர்பார்க்கத் தக்கதே. இத்தகைய நிலையில் தமது சுய நிர்ணயக் கோரிக்கையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையைச் சர்வதேச சமூகம் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். பிறர் கொடுத்ததையே பகிர்ந்தளிக்கத் தயாரில்லாதவர்கள் தங்கள் கைகளில் பறித்து வைத்துக் கொண்டுள்ளதைப் பகிர்ந்தளிப்பார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

# பத்தொன்பது கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

பத்தொன்பது கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையொன்றில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. நேற்று முன்தினம் நள்ளிரவு மேலதிக நேர சேவையில் ஈடுபடுவதில்லையென இலங்கைத் தபால் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. ஒன்பது தொழிற்சங்கங்கள் இணைந்து தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றன.

பல வருடங்களாகத் தீர்க்கப்படாத பிரச்சினை தபால் ஊழியர்களுக்கு உள்ளது என்று தொழிற்சங்கம் தெரிவிக்கின்றது. தபால் திணைக்களத்தின் பதவி வெற்றிடங்கள் நிலவுவதாகவும், பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவிருக்கும் தபால் ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சம்பள முரண்பாடுகள் காணப்படுவதோடு அதிகரித்து வரும் சனத் தொகைக்கு ஏற்ப தபால் சேவையை அபிவிருத்தி செய்வது குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை எனவும் குற்றம் சாட்டியிருக்கின்றார்கள்.

# இனப்பிரச்சினையில் நோர்வேயின் அனுசரணை பிரதமர் மகிந்தவின் நிலைப்பாடு என்ன?

## – ஐ.தே.க. வின் ஜோன்சன் பெர்னாண்டோ கேள்வி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினையில் நோர்வே அனுசரணையாளர்களாக செயற்படுவது தொடர்பாக சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பெர்னாண்டோ இது குறித்து கூறியதாவது;

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தலைவராக உள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நோர்வே அனுசரணைப் பணிகள் தொடரும் என்று கூறிவருகிறார்.

ஆனால் நோர்வே அனுசரணைப் பணியை மறுபரிசீலனை செய்யப் போவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறிவருகிறார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, சட்டம் ஒழுங்கு, வேலைவாய்ப்பின்மை, வாழ்க்கைச் செலவீனம், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண உதவிகள் ஆகியவற்றில் தனது நிலைப்பாடு எது என்பதை பொதுமக்களிடம் மகிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக விளக்க வேண்டும். தன்னுடைய 30 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் இந்த நாட்டு மக்களுக்காக மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்றிய முக்கியமான திட்டங்கள் ஏதும் உண்டா? 30 ஆண்டுகள் எவ்வித செயற்றிட்டத்தையும் முன்னெடுக்காத மகிந்த ராஜபக்ஷ, அடுத்த ஆறு ஆண்டுகளிலா நாட்டைக் காப்பாற்றுவார்? என அவர் கூறினார்.

# முன்னைய ஆட்சியாளரின் சிறுசிறு ஒப்பந்தங்களால் நாட்டின் இறைமைக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது

## – சிறிலங்கா பிரதமர் கூறுகின்றார்

(கொழும்பு)

முன்னைய ஆட்சியாளர்கள் சிறு சிறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டதன் மூலம் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. நாட்டைக்கூறு போடாது இறைமைக்கும் பங்கம் ஏற்படாது, இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காணவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கம்பளை நகரில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று எமது நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் முட்டுக்கட்டையாக உள்ள போரிற்கு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்தி, பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இந்த நிலைப்பாட்டினை அனைவரும் உணர்ந்து கொண்டுள்ளனர். இன்று நாடு போர், பொருளாதாரச் சுமை ஆகிய இரண்டிற்கு முகம் கொடுத்துள்ளது.

போரிற்கு நிரந்தரத் தீர்வினைக் காண்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும். அதற்காக ஒருபோதும் நாட்டைப்பிளவுபடுத்த அனுமதிக்க முடியாது. இனப்பிரச்சினைக்கு தீர்வொன்று மிக அவசியமே, அத்தீர்வுகள் ஒற்றை ஆட்சி முறையின் அடிப்படையிலேயே கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சனாதிபதித்தேர்தலில் யாருக்கு ஆதரவு மு.கா. இன்னும் தீவிரமாக ஆராய்கிறது

## – ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் வோட்டர் வில்டன் தலைமையிலான ஐரோப்பிய ஆணைக்குழுவின் தேர்தல் கண்காணிப்பு பிரதிநிதிகளுக்கும் இடையில் சனாதிபதித்தேர்தல் தொடர்பாக விசேட பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது.

ஹக்கீமின் இல்லத்தில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த ரவூப் ஹக்கீம் சனாதிபதித்தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதென்பதை இன்னும் சில சுற்று பேச்சுவார்த்தைகளின் பின்னர் தீர்மானிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, தாம் தேர்தலின் போது ஏற்படலாம் என எதிர்பார்க்கப் படும் வன்முறைகள் மற்றும் சிறுபான்மை தலைவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படும் கொலை முயற்சிகள் குறித்து ஐரோப்பிய பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு வந்ததாகத் தெரிவித்தார்.

அமைச்சர் பேரியல் அஸ்ரப்புடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப் பட்டுள்ளது. இதன் தொடச்சியாக எதிர்காலத்திலும் பேச்சுக்கள் நடத்தப் படும் என்றும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார். (32)

# சிறை அதிகாரிகள் வான் மீது தாக்குதல் நால்வர் உயிரிழப்பு; மேலும் நால்வர் படுகாயம்!

(கொழும்பு)

சிறைத்துறை அதிகாரிகள் சென்ற வான் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நால்வர் பலியாகினர். நீர்கொழும்பிலிருந்து கப்பஹா நீதி மன்றத்துக்கு இந்த வான் சென்ற போது நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சிறை அதிகாரிகளின் வானை மறித்த ஆயுதம் தாங்கிய குழுவினர் தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் வானில் இருந்த மூன்று சிறைத்துறை அதிகாரிகளும் ஒரு பொதுமகனும் உயிரிழந்தனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரும் பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது. சிறிலங்கா பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறைச்சாலைகளின் பாதுகாப்பிற்கென பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனம்

## – சிறிலங்காவின் நீதியமைச்சர் ஏற்பாடு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பாதுகாப்புத் தொடர்பான சகல நடவடிக்கைகளையும் கவனிப்பதற்கென பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

சிறைச்சாலைகளிலும் வெளியிலும் கைதிகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொளள்ளப் பட்டதாக நீதியமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார். சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பாதுகாப்புத் திட்டங்களில் குறைபாடுகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

போதைப் பொருட்களை வைத்திருத்தல், கையடக்கத்தொலைபேசிகளை பயன்படுத்தல் என்பன சிறைச்சாலைகளில் தடை செய்யப் பட்டுள்ளது. எனினும் சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு இந்த நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். சிறைச்சாலைகளின் பாதுகாப்புக்கு என நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள பிரதி பொலிஸ்மா அதிபரை நியமிப்பதற்கான அமைச்சரவை அனுமதி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

# மட்டு-கூழாவடியில் நவீன வசதிகளுடன் திலீபன் மருத்துமனை திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கூழாவடியில் நவீன வசதிகளுடன் கூடிய தியாக தீபம் திலீபன் மருத்துவமனை ஒன்று நேற்று முன்தினம் புதிதாக திறந்து வைக்கப்பட்டது. தியாகி திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு நாளை யொட்டி குடும்பிமலைக் கோட்ட அரசியல்துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ் வினைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு அவர்களால் தியாக தீபம் லெப். கேணல் திலீபன் மருத்து வமனை திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத் தின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட இம்மருத்துவ சேவை நிலையமா னது குடும்பிமலைக் கோட்டத்திற்குட் பட்ட மக்களது நீண்ட நாள் மருத்துவ தேவையை நிறைவேற்றக் கூடிய வாய்ப்பை பெற்றுக்கொடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் போராளிகளினால் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கப் படவிருக் கின்றன.

குடும்பிமலைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஒளியன் தலை மையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மட்டக்களப்பு மாவட்ட தளபதி நாகேஸ் ஏற்றி வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கட்ட ளைத் தளபதி கேணல் பானு தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்.

ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் கிருஸ்ணபிள்ளை, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர் ஜெயானந்தமூர்த்தி, தலை மைச் செயலகப் பொறுப்பாளர் அமுதன் ஆகியோர் நினைவுரை ஆற்றினர்.

தியாக தீபம் லெப்.கேணல் திலீபன் மருத்துவமனையில் வெளி நோயாளர் பகுதி, மருத்துவக் களஞ்சியம், ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, மகப்பேற்று விடுதி ஆகியவற்றினையும் வைத்திய அதிகாரிகளுக்கான விடுதி, தாதிமாருக்கான விடுதி, அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மருத்துவமனை வளாகத்தினுள் பயன்தரும் மரங் களும் நாட்டப் பெற்றன.

## ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு புலிகள் பயணிக்கத்தடை!

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிற்கு விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் பயணம் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதித்துள்ளது

தற்போது நிலவும் சூழ்நிலைகள் மற்றும் தொடரும் கொலைச் சம்பவங்கள் ஏன்பவற்றைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் பிரித்தானியாவால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் ஊடக இணைப்பாளர் தயாமாஸ்டர் ஏ.பி செய்திநிறுவனத்திற்கு தெரிவிக்கையில்;

நாங்கள் பயங்கரவாத இயக்கமல்ல, நாம் எமது மக்களின் விடுதலைக்காகவே போராடி வருகிறோம். பிரித்தானியாவின் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக விடுதலைப்புலிகள் விரைவில் அறிக்கை ஒன்றையும் வெளியிடவுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

## இனப்பிரச்சினை..

இதற்கு சர்வதேசத்தின் முழுமையான உதவியும் கிடைத் துள்ளது.

இந்த நிலையில் தீர்வு தொடர் பான பேச்சுவார்த்தைகள் முன் னெடுத்துச்செல்லப்படும் என எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலை தொடர்பிலான வழக்கின் மூலம் போர் நிறுத்த உடன்படிக்கையின் செல்லு படித்தன்மை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

எனவே அதனை மையமாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கமுடியும்.

போர்நிறுத்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டபோது இருந்ததைக் காட்டிலும் தற்சமயம் புதிய நிலைமைகள் ஏற்பட்டிருப்பதால் அதற்கு அமைய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு செயற்படு வதற்கான வழிமுறைகள் வகுக்கப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

போர் நிறுத்த உடன் படிக் கையை செயற்படுத்துவதில் அரசாங்க தரப்பில் பலவீனங்கள் காணப்படு கின்றன.

எனவே பலம் வாய்ந்த பொலிஸ் துறை அமைக்கப்பட்டு அதன் கட்டமைப்பும் சீரமைக்கப்படவுள்ளது.

இதன் மூலம் அனைத்து தரப்பு படுகொலைகளும் நிறுத்தப்படும் என ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு சமாதானத்தின் பெறுபேறுகள் சென்றடையும் வகையில் வழிகளை மேற்கொள்வ துடன், வடக்குக்கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்காக பிரத்தி யேக அமைச்சு ஒன்றும் உருவாக் கப்படும்.

டோக்கியோ பிரகடனத்தின்படி இறுதிதீர்வு ஒன்றை அடையும் வரை ஒஸ்லோ பிரகடனத்தை அடிப்படை யாகக் கொண்டு செயற்படுவதுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் குழு ஒன்றை சமாதான பேச்சுவார்த்தையில் பங்குபற்றச்செய்யப்படும்.

அதேநேரம் ஆழிப்பேரலைக்கு பின்னரான கட்டமைப்பில் முஸ்லிம் களின் பங்கேற்பும் உறுதிப்படுத் தப்படும்.

பேச்சுவார்த்தையின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டபிறகு அந்தத் தீர்வினை மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கு முன்வைக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான பால்மா, பருப்பு உலர்ந்த நெத்தலி போன்றவற்றின் விலையை உடனடியாக குறைப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன் கீழ் 400 கிராம் பால்மா வின் விலை 139 ரூபாவாக குறைக்கப் படவுள்ளது.

சமுர்த்தி திட்டத்திற்கு பதிலாக சுயசக்தி என்ற புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்கீழ் வறுமைக்கோட்டில் வாழும் மக்களுக்கு 1000ரூபா முதல் நான்காயிரம் ரூபா பெறுமதியான உணவு முத்திரை வழங்கப்பட வுள்ளது.

ஆழிப்பேரலையின் பின்னர் அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட 100மீற்றர் தடை உடனடியாக நீக்கப்படும்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப் பட்ட வீடுகள் மூன்று மாதங் களுக்குள் திருத்தியமைக்கப்படும்.

பெண்களுக்கும் ஆண்களை ஒத்த நிலையில் சம்பளங்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப் படும்.

கல்வித்துறையில் அனை வருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது. போதை யில் இருந்து மீளும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும் அதேநேரம் பொது இடங்களில் புகைப்பிடிப் பதற்கு தடை விதிக்கப்படும்.

பாதுகாப்பு தொடர்பில் 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப நவீன ஆயுதப்படை ஒன்று உருவாக் கப்படும்.

ஆறு படைத்துறையை சேர்ந்த ஒன்றிணைந்த படை அமைக்கப் படும்.

போர் வீரர்களுக்கென அமைச்சு ஒன்று உருவாக்கப்படும். அத்துடன் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும்.

கிழக்கு மாகாண மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். இனஅடிப்படையிலான மோதல் களை தடுக்க இந்தியாவை பின்பற்றி பொலிஸ்துறை ஒன்று அமைக்கப்படும். வெளிநாட்டு உறவுகள் தொடர்பில் தெற்காசியா வுடனான தொடர்புகள் பலப்படுத் தப்படும்.

இதற்கு அப்பால் இறுதியாக சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம் ராஜசுகம் அனுபவிப்ப தற்கான இல்லம் என்ற அடிப்படை யை மாற்றி 24 மணிநேரமும் இயங்கும் நாட்டின் நிர்வாக கேந்திர மையமாக அது மாற்றப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதித்தேர்தல் விஞ் ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் சனாதிபதிக்கு தற்போது வழங்கப்படும் அதிமேதகு, மாண்புமிகு போன்ற கௌரவங்கள் கைவிடப்படும். அத்துடன் சனாதிபதிக்கான உத்தியோகபூர்வ கொடியும் கைவிடப்படும் என அந்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (32)


மாபெரும் பொங்குதமிழ்—2005

எங்கள் சுய நிர்ணயத்தை உலகநாடுகள்

அங்கீகரிக்கும் வண்ணம்

பொங்கு தமிழ் பேரெழுச்சியில்

உறுதியாய் ஒன்றிணைவோம்!

காலம்:-30.09.2005

இடம்:- யாழ்.ப ்கலைக்கழகம்


## பொங்கு..

கடற்படையினர் தமது துப்பாக்கிகளை சுடுநிலமைக்கு கொண்டு வந்து சென்றவர்களை விரட்டிய போதிலும் அவர்கள் அந்த இடத்தைவிட்டு நகர மறுத்து படைமுகாமின் முன்னர் இருந்து கொண்டார்கள்.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன் மு.சிவனேசன் ஆகியோர் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து கடற்படையினருடன் கலந்துரையாடினர். அத்துடன் குறிப்பிட்ட இடத்திற்கு சென்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் இராணுவத்தினர் மற்றும் சம்பந்தப்பட்ட வர்களுடனும் கலந்துரையாடினார்கள் .

இவர்கள் மேற்கொண்ட கடும் பிரயத்தனங்களின் விளைவாக மண்டைதீவுக்குள் பிரவேசிப்பதற்கான அனுமதியை கடற்படை உயர் அதிகாரிகள் மாணவர்களுக்கு வழங்கினர்.

இதனையடுத்து கண்காணிப்புக் குழுவினர் பாதுகாப்பு வழங்க மண்டைதீவுக்கு சென்ற மாணவர்கள் மக்களுடன் கருத்துப் பகிர்வுகளில் ஈடுபட்டனர்.

இதனிடையே மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள் காரணமாக பண்ணை வீதியூடான போக்குவரத்து சிலமணி நேரம் தடைப்பட்டது. எனினும் பொதுமக்களது போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்படுத்த விரும்பாத மாணவர்கள் போக்கு வரத்தை சீர்செய்தனர். (33,27,37,41)

## இராணுவ...

கில் உள்ள இராணுவமுகாமில் இருந்து திரும்பி வரும்போது இரண்டு உந்துருளிகளில் வந்த இளைஞர்கள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இவர் இராணுவ முகாமில் இருந்து திரும்பி வரும் பொழுது இவருடன் குறிப்பிட்டவர்கள் ஏதோ கதைத்ததாகவும் அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட பெண்மணி வீட்டினுள் ஓட எத்தனித்ததைத் தொடர்ந்து குறிப்பிட்ட இளைஞர்கள் இவரைத் தொடர்ந்து சென்று சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ள தாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட இடத்திற்கு பொலிசாருடன் வந்த யாழ்ப்பாண மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சடலத்தை யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையில் மரணவிசாரணைக்காக ஒப்படைக்கும்படி கட்டளையிட்டுள்ளார்.

குறிப்பிட்ட பெண்மணி பல்வேறு குற்றச்செயல்களையும் மற்றும் சமூகவிரோதச் செயல்களிலும் ஈடுபட்டு வந்தவர் எனவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள். (41,33,27,28,37)

## சிறிலங்கா...

காவல் துறையினரால் மேற்படி மூன்று சிறிலங்காப் பொலிசாரும் கிளி.மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பொழுது வழக்குத்தொடுநர் தரப்பின் அறிக்கையின் பிரகாரமும் சந்தேக நபர்களின் பாதுகாப்பையும் மையமாகக் கொண்டு பிணை நிராகரிக்ககப்பட்டு தெடர்ந்தும் எதிர்வரும் 11.10.2005 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டு 11ஆம் திகதியன்று மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமிழீழ காவல்துறையினருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதியாளர் சாதனா உத்தரவு பிறப்பித்தார். (சோ)

## காலம்...

பின்னமாகியுள்ளது.

"அந்நியரிடமிருந்து பெற்ற சுதந்திரத்தை சமமாகப்பகிர்ந்து இறைமை செய்வோம்."என்று நாம் விடுத்த கோரிக்கைகள், அமைதி வழிப்போராட்டங்கள் , ஆர்ப்பரிப் புக்கள் செய்து கொண்ட ஒப்பந்தங் கள் அத்தனையும் பயனற்றுப்போக ஆயுதமேந்தி எமது இறைமையை தாயகத்தின் கணிசமான பகுதிகளில் நிலை நிறுத்தினோம். மீதமிருந்த நிலப்பரப்பை மீட்க முயல்கையில், உலகில் சமகால போக்குக்கு அமை வாக யுத்த நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண முன்வந்தோம்.

ஆயினும் சிங்கள தேசத்திற்குத் தேவைப்பட்டது யுத்த நிறுத்தம் மாத்திரமே! சமாதானத்தீர்வு அல்ல. எமக்கு எதுவித உரிமைகளை மாத்திரமல்ல; மனிதாபிமான உதவிகளைக்கூட விட்டுத்தருவ தாயில்லை.

சகலரையும் சமமாக மதிக்க வேண்டிய சட்டமும் நீதிமன்றமும் கூட இந்த நாட்டில் தமிழரை அடக்கி அழித்த தமிழருக்கு இழைக்கப்படும். அநீதிகளை அங்கீகரிக்கும் அமைப்புக்களாகவே மாறிவிட்டன. சுனாமி நிவாரணக் கட்டமைப்புக்கு விதிக்கப்பட்ட நீதிமன்றத்தடையும், பிந்துனுவெவ கொலைக் குற்ற வாளிகளை விடுதலை செய்ததும் இந்நாட்டில் தமிழருக்கு நீதி கிடைக் காது என்பதற்கான உறுதிச்சான்று களாகும்.

அத்துடன் நாட்டின் அதியுயர் ஆட்சி அதிகாரத்தைப்பெற முனையும் ஆளும் கட்சி வேட்பாளர் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான கதவு களை திறக்க முடியாத பூட்டுக்க ளால் பூட்டி பேரினவாதத் தீவிர சக்தி களுடன் ஒப்பந்தங்கள் செய்துள்ளார்.

எனவே, இனியும் சேர்ந்து வாழ்தல் சாத்தியமல்ல என்றநிலை யில், எமது சுயநிர்ணய உரிமையை. தாயக மீட்பை நிலைநாட்டும் போராட் டத்திற்கும் அதனைத் தொடர்ந்து அமையவிருக்கும் இறைமையுள்ள தமிழீழத்துக்கும் அங்கீகாரம் வழங்கும்படி கடந்த 27-07-2005 இல் வவுனியா பேராளர் மாநாட்டில் வெளிப்படுத்திய தாயகத்தின் தேசியப்பிரகடனத்தை வலியுறுத்தி எமது அபிலாசைகளை வெளிப்படுத் துவோம எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பணியாளர் வேண்டுகை

பெண்களுக்கு ஆடை தைப்பதில் அனுபவமுள்ள பெண் பயிற்றுவிப்பாளருக்கும்

தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்களுக்கும் பணிநிலை வெற்றிடங்கள் உண்டு.

உரியவர்கள் 15-10-2005 இற்கு முன்னதாக நேரில் எமது நிறுவனத்திற்கு வருகை தரவும்.

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ் சாலை, கிளிநொச்சி. தொ.பே: 021-228 5971 (சி.12800)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பெரியதம்பி கந்தையா

முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களான திருமதி ப.தவராசா அவர்களின் தந்தையாரும் திருமதி வி.சிவலிங்கம் அவர்களது மாமனாருமாகிய அமரர் பெரியதம்பி கந்தையா அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு துயருறும் வேளையில், அன்னாரது பிரிவினால் சோகத்தில் ஆழ்ந்துள்ள குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணியாளர் நலன்புரிச்சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு. (சி.12883)

இப் பத்திரிகை ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வீரவணக்கம்



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 12 | 24 |
| 09 | 09 |
| 1969 | 2006 |

## லெப்.கேணல்
## சுட்டா/ பிறையாளன்
## (கயஸ்ரின்பால் சில்வெஸ்ரர்)

8ஆம் வட்டாரம், சாம்பல்த் தீவு, திருகோணமலை.

த.முகவரி: 1ஆம் வட்டாரம், கைவேலி, புதுக்குடியிருப்பு.

தாயகப் போரிலே தன்பணி முடித்தான் – எம்
தாயென்ற உணர்வையே எம்மிடம் வடித்தான்
தன்னினப் பணியைத் தன்னுயிராய் மதித்தான்
தரணியில் என்றும் வாழ்பவனாய் நிலைத்தான்.

*லெப்.கேணல் நவம் அறிவுக்கூடம்.*